E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்
2022 டிசம்பர் 3 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 286 | Saturday 03, December, 2022 | 17 பக்கங்கள்

## இலங்கையில் தயாரான அதிநவீன பேருந்து

### கம்பஹாவில் மாணவன் சாதனை



இலங்கையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இலகுரக பேருந்து ஒன்றை கலகெடிஹேன சனிரோ நிறுவனம் தயாரித்துள்ளது.

கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் கண்டுபிடிப்புப் பிரிவில் பணியாற்றிய 06

## இலங்கை இராணுவத்திடமிருந்து ஜனாதிபதிக்கு சிறப்பு Attach Case

### இராணுவ தளபதியால் உத்தியோகபூர்வமாக கையளிப்பு



ஜனாதிபதியின் ஆவணங்களைக் கொண்டு செல்லக்கூடிய சர்வதேச தரத்தினாலான சிறப்பு Attach Case இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் விக்கும் லியனகேயினால் நேற்று (02) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் மின் மற்றும் இயந்திர பொறியியலாளர்களால் இந்த சிறப்பு Attach Case வடிவமைக்கப்பட்டுள்ளது. 06

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் நேற்று வெளியானது




2021 உயர்தரப் பரீட்சை பெறுபேறு அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் நேற்று வெளியிடப்பட்டன. அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் 06

## பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலயத்தில் நேற்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு நல்லாசி வேண்டி விசேட பூசை வழிபாடுகள்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு நல்லாசி வேண்டி பம்பலப்பிட்டி நாட்டுக்கோட்டை நகரத்தார் பழைய கதிரேசன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளை நடத்தினர்.

சர்வதேச இந்துமத பீடத்தின் ஏற்பாட்டில் ஆலய தர்மகர்த்தா இராஜேந்திர செட்டியார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் வை.அனிருத், முன்னாள் ஜனாதிபதியின் இந்து சமய விவகார 06

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் ஓர் அங்கமாக

# அரச அதிகாரிகளுக்கு டிஜிட்டல் தொழில்நுட்ப பயிற்சி வழங்கல்

### முதற்கட்டமாக ஒரு இலட்சம் அதிகாரிகளுக்கான வேலைத்திட்டம் நேற்று ஆரம்பம்

ஒரு இலட்சம் அரச அதிகாரிகளுக்கு டிஜிட்டல் தகவல் தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் நேற்று ஆரம்பித்துள்ளது.

நேற்றுக் (02) காலை கேகாலை மாவட்ட செயலகத்தில் 1,00,000 அரச அதிகாரிகளுக்கு டிஜிட்டல் தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்கும் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் அரசாங்க அதிகாரிகள் பலர் இணைந்து கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின்படி நாட்டின் முழு அரச சேவையையும் டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் மிக வலுவான விரைவான அரச சேவையை உருவாக்கி அதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை அடைவதே இந்த வேலைத்திட்டத்தின் பிரதான இலட்சியமாகுமென நிகழ்வில் கலந்துகொண்ட தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

Next Gen (அடுத்த தலைமுறை) திட்டம் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவாகும். டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமென வரவு செலவு திட்டத்திலும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியின் இந்த யோசனையின்படி இன்று முதல் இப்புதிய 06

## வன்னியில் மக்களது காணிகள் வனத்துறையினால் அபகரிப்பு

### தடுத்து நிறுத்துமாறு அரசிடம் திலீபன் MP கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வன்னி மாவட்டத்தில் மக்களின் விவசாய காணிகள் வனத்துறை அதிகாரிகளால் அபகரிக்கப்படுவதை தடுக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 06

## மீள ஆரம்பமாகவுள்ள திரிபோஷ உற்பத்திகள்

### அதன் நிறுவனத் தலைவர் தீப்தி தெரிவிப்பு



மக்காச்சோளம் இருப்புக்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் திரிபோஷ உற்பத்தியை மீள ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்துள்ளார். 06

## மேலதிக உதவிகள் பெறுவது தொடர்பில் பேச்சுவார்த்தை

### சமந்தா பவருடன் அலி சப்ரி சந்தித்துரையாடல்



உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் (USAID) நிர்வாகி சமந்தா பவரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கைக்கு மேலதிக உதவிகளைப் பெறுவது தொடர்பாக அமைச்சர் சப்ரி, நிர்வாகி சமந்தா பவருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஆண்டனி பிளிங்கன் விடுத்த அழைப்பின் பேரில் அமைச்சர் அலி சப்ரி அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

## வீண் பேச்சுக்களால் பெறுமதியான நேரம் வீணடிப்பு

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரது நடத்தை மிகவும் அநாகரிகமானது

### பாராளுமன்றத்தில் சபாநாயகர் கண்டனம் தெரிவிப்பு



எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரின் நடத்தை மிகவும் அநாகரிகமானது எனவும் அவர்கள் வீண் பேச்சுக்களால் சபையின் பெறுமதியான நேரம் வீணடிக்கப்படுவதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) உரையாற்றிய அவர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் நடந்து கொள்ளும் விதம் மிகவும் அவமரியாதையாக 06

## அரச ஊழியர்களது சம்பளம் எவ்வகையிலும் குறைக்கப்படாது

### அரசு அதனை பொறுப்பேற்கும் – ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய



அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைக்காமல் அந்த சுமையை அரசு ஏற்றுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு ஏதும் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை என்று விமர்சனங்கள் உள்ளதாக கூறப்படுகின்றது. 06

## பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை 44,000 பேரை உள்வாங்க நடவடிக்கை

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள வெட்டுப்புள்ளிகளின் படி இம்முறை 44,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளதாக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க நேற்று 06

## மின்சாரக் கட்டண திருத்தம் தற்போது அவசியமற்றது

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு

மின்சாரக் கட்டணத்தை திருத்துமாறு மின்சார சபை கோரவில்லை எனவும் தற்போது கட்டண திருத்தம் தேவையில்லை எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பாக மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பல்வேறு முரண்பாடான கருத்துக்களை 06

## நிலக்கரி கையிருப்பில் வீழ்ச்சி; மின்சார நெருக்கடி மீண்டும் ஏற்படலாம்

### பல்வேறு தரப்பினர் முன்னெச்சரிக்கை



மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரிக்க மின்சார சபை தயாராகி வரும் நிலையில், மற்றுமொரு பாரிய மின்சார நெருக்கடி தொடர்பில் பல்வேறு தரப்பினரும் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளனர். நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திற்கு தேவையான அளவு நிலக்கரியை 06

## அதிகரித்துவரும் "ஹேக் " முறை சம்பவங்கள்; வங்கிக் கணக்குகளை அடிக்கடி சரிபாருங்கள்

### CIDயில் குவிந்துவரும் முறைப்பாடுகள்



வர்த்தகர் ஒருவரின் வங்கிக் கணக்கை ஹேக் செய்த குற்றச்சாட்டில், வெளிநாட்டவர் இருவர் உட்பட எட்டுப்பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சிஐடி) கணினி குற்றப்பிரிவு இரண்டு உக்ரேனியர்கள் மற்றும் மூன்று பல்கலைக்கழக மாணவர்கள் 06

## இலங்கைக்கு கடத்தவிருந்த 200kg கஞ்சா பறிமுதல்

### நாகை மாவட்டத்தில் படகுடன் 03 பேர் கைது

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



தமிழ்நாடு நாகை மாவட்டத்திலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 200 கிலோ கஞ்சா நேற்று வெள்ளிக்கிழமை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 03 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படகின் உரிமையாளர் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 06

## வறுமையை பயன்படுத்தி சிறுநீரக வியாபாரம்

### எச்சரிக்கையாக இருக்க CID கோரிக்கை



வறிய குடும்பங்களை சேர்ந்த நபர்களை ஏமாற்றி பணம் தருவதாக கூறி பொரள்ளை கொட்டா வீதியில் உள்ள தனியார் மருத்துவமனை ஊடாக மேற்கொள்ளப்படும் சிறுநீரக வியாபாரம் சம்பந்தமாக துரிதமாக விசாரணை நடத்தி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் ராஜேந்திரா ஜயசூரிய கொழும்பு குற்றவியல் விசாரணை பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார். 06

## துறைமுக அதிகார சபையில் ஊழல் மற்றும் முறைகேடுகள்

### கண்டறிய அமைச்சரினால் குழு அமைப்பு

இலங்கை துறைமுக அதிகார சபையில் இடம்பெற்ற ஊழல் மற்றும் முறைகேடுகளை கண்டறிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் மூவர் உள்ளனர். அதன்படி, எம். டி.எஸ்.ஏ.பெரேரா, காமினி குமாரசிறி மற்றும் கேஜிபி வசந்த கமகே ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். துறைமுக அதிகாரசபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய தரப்பினரும் 06

## இராமேஸ்வரத்திலிருந்து 2,100 Kg மஞ்சள் கடத்தல்

### 35 மூடைகளுடன் ஒருவர் கைது

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இராமேஸ்வரம் மண்டபமருகே வேதாளை கடற்கரை பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 2,100 கிலோ எடைகொண்ட 35 மஞ்சள் மூடைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 04 மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள், அந்த வாகனங்களை நிறுத்திவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர். 06

# சர்வதேச செய்திகள்

## இந்தியா–இஸ்ரேல் பாதுகாப்பு ஒத்திகை



பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு எதிராகத் தயாராகும் வகையில் இந்தியாவும் இஸ்ரேலும் கூட்டு பாதுகாப்பு பயிற்சி ஒத்துழைப்பை நடாத்தியுள்ளன.

இந்தியாவிலுள்ள இஸ்ரேல் தூதரகம், இந்திய பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து முன்னெடுத்த இந்த பாதுகாப்பு கூட்டு ஒத்திகை புதுடில்லியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு அனைத்து பாதுகாப்புப் படைகளின் தயார்நிலையைப் பரீட்சிக்கும் நோக்குடன் இக்கூட்டுப் பயிற்சி நடாத்தப்பட்டுள்ளது.

## இந்தியா – சிங்கப்பூர் இடையே ஒத்துழைப்பு



பிராந்திய இணைப்புகள், சைபர் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் உட்பட இந்தியாவுடன் சிங்கப்பூர் ஆழமான ஒத்துழைப்பை மேற்கொள்ள முடியும் என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். ஆசியான்–இந்தியா மற்றும் ஆசியான்–அமெரிக்கா இடையே விரிவான மூலோபாய கூட்டாண்மைகள் நிறுவப்படுவது குறித்தும் அவர் குறிப்பிட்டார்.

இந்த கூட்டாண்மைகளில் இருந்து சிங்கப்பூர் மற்றும் ஆசியான் இரு தரப்பு நன்மை பெறும் என்றும் அவர் கூறினார். சிங்கப்பூர் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## கனடாவின் புதிய திட்டம் வெளியீடு



பிராந்தியத்தில் மூலோபாயம், பொருளாதாரம் மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் முக்கியம் வாய்ந்த இந்தியாவுடன் புதிய வர்த்தக உடன்படிக்கை ஒன்றை முன்னெடுப்பது உட்பட அந்த நாட்டுடன் ஒத்துழைப்பை அதிகரிக்கும் திட்டத்தை கனடா தனது புதிய இந்தோ–பசிபிக் மூலோபாய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதில் அடுத்த அரை நுற்றாண்டில் கனடாவின் எதிர்காலத்தை வகுப்பதில் இந்தோ–பசிபிக் பிராந்தியம் முக்கிய பங்காற்றும் என்று அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சீனாவை இடையூறை ஏற்படுத்தும் சர்வதேச சக்தியாக அந்த ஆவணத்தில் விபரிக்கப்பட்டிருப்பதோடு அதன் சர்வதேச சட்ட ஒழுங்கு மீறலையும் கண்டித்துள்ளது.

மக்கள் எதிர்ப்பை தொடர்ந்து

# சீனாவில் கொரோனா முடக்கத்தில் தளர்வு



சீனா, சில கொவிட்–19 நோயாளிகளை மட்டும் வீட்டில் தனிமைப் படுத்திக் கொள்ள அனுமதிக்கவுள்ளது. மக்கள் அதிகம் வசிக்கும் மாவட்டத்திலிருந்து இந்தத் தளர்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலிருந்து கொவிட்–19 தொற்றை முற்றிலும் ஒழித்துக்கட்டும் கொள்கை காரணமாக கடுமையான கட்டாய கட்டுப்பாடுகளை செயற்படுத்திய சீன அரசாங்கம், மக்கள் எதிர்ப்புக்குப் பின்னர் தனது நிலையை மாற்றி வருகிறது.

அதிக ஆபத்து இல்லாத நோயாளிகள் இனி ஒரு வாரம் வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை தேர்ந்தெடுக்கலாம் என்று விபரமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன் தீவிர பாதிப்பு இல்லாதவர்கள் கூட அரசாங்கத்தின் தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சீனாவில் உள்ள சாவோயாங் மாவட்டத்தில் முதலில் புதிய தளர்வு செயற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு வெளிநாட்டு தூதரகங்கள், அலுவலகங்கள் உட்பட 3.5 மில்லியன் பேர் வசிக்கின்றனர்.

சமூகத்தில் அதிகரித்துள்ள பதற்றமே சீனாவின் மாற்றத்திற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ள விரும்புவோர் தனிமைப் படுத்தும் காலத்தில் வெளியே செல்ல மாட்டோம் என்ற உத்தரவாதக் கடிதத்தில் கையெழுத்திட வேண்டும். வீட்டின் கதவை அதிகாரிகள் திறக்கும்போது அவர்களை எச்சரிக்கும் உணர்வுக் கருவிகள் வீட்டின் கதவில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

சீனாவில் கடுமையான கொவிட்–19 கட்டுப்பாடுகளுக்கு எதிராக கடந்த வாரம் மக்களும் பல்கலைக் கழக மாணவர்களும் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நச்சு இருமல் மருந்து

# இந்தோனேசிய அரசுக்கு எதிராக மக்கள் வழக்கு



இந்தோனேசியாவில் நச்சுப்பொருள் இருந்த இருமல் மருந்தை உட்கொண்டு உயிரிழந்தோர் அல்லது பாதிக்கப்பட்டோரின் குடும்பங்கள் சில, நாட்டின் அரசாங்கத்தின் மீதும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் மீதும் வழக்குத் தொடுத்துள்ளன.

கூட்டு வழக்கான அது, இந்தோனேசிய சுகாதார அமைச்சு, நாட்டின் உணவு, மருந்து அமைப்பு, நச்சுத் தன்மை கொண்ட இருமல் மருந்துகளை விற்ற 7 நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் இவ்வாண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து 199 பேர் சிறுநீரகக் கோளாறினால் உயிரிழந்தனர்.

நச்சுப்பொருள் இருக்கும் மருந்துகள் விற்கப்படுவதும் உட்கொள்ளப்படுவதும் தடுக்கப்படவில்லை என்பதால் சிறுவர்கள் பாதிக்கப்பட்டனர்; சிலர் உயிரிழந்தனர். அது தொடர்பில் வழக்குத் தொடுக்கப்படுவதாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சட்டப் பிரதிநிதி குறிப்பிட்டார். சூழ்நிலைக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை என்றும் அது வருத்தமளிக்கிறது என்றும் அவர் கூறினார்.

அந்தக் கூட்டு வழக்கில் 12 குடும்பங்களை 2 குடும்பங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. மேலும் சில குடும்பங்கள் அதில் சேரக்கூடும் என்று நம்பப்படுகிறது.

# வடகொரிய அதிகாரிகள் மீது அமெரிக்கக் கூட்டணி தடை



வட கொரியாவின் அண்மைய ஏவுகணை சோதனைகளுடன் தொடர்புபட்ட அந்நாட்டின் மூன்று மூத்த அதிகாரிகள் மீது அமெரிக்கா மற்றும் அதன் ஆசிய கூட்டணி நாடுகள் தடை விதித்துள்ளன.

வட கொரியா இந்த ஆண்டில் சாதனை எண்ணிக்கையாக 60க்கும் அதிகமான ஏவுகணைகளை வீசியது. இதன்போது அது பல கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் சோதித்தது. இந்த ஆயுதங்களை மேம்படுத்துவதில் பிரதான பங்காற்றியதாகக் கூறப்படும் ஜொங் இல் ஹோ, யூ ஜின் மற்றும் கிம் சூ கில் ஆகியோர் மீதே தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதில் ஜப்பான், தென் கொரியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் தடைகளை விதித்துள்ளன.

வட கொரியா மீது மேற்கத்திய நாடுகளால் பல ஆண்டுகளாக தடைகள் விதிக்கப்பட்டு வருகின்றன. இந்த புதிய தடைகளின் கீழ் வட கொரிய அதிகாரிகளின் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட அனைத்து சொத்துகளும் முடக்கப்படும். அமெரிக்காவில் எந்த ஒரு வர்த்தகம் அல்லது தனி நபர்களுடனான பரிவர்த்தனைகளில் ஈடுபடவும் அவர்களுக்கு தடை விதிக்கப்படுகிறது.

# உக்ரைன் போர்: புட்டினுடன் பேசுவதற்கு பைடன் தயார்

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர விருப்பம் இருந்தால் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்திக்கத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா விஜயம் மேற்கொண்டிருக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோனுடன் சேர்ந்து ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற பைடன், புட்டின் அதனை இன்னும் செய்யவில்லை என்று வலிறுயுத்தினார்.

ரஷ்யாவின் போருக்கு எதிராக தொடர்ந்து நிற்பதாக இரு தலைவர்களும் இதன்போது தெரிவித்தனர். ஏற்க முடியாத சமரசத்திற்கு உக்ரைனை ஒருபோதும் வலியுறுத்தமாட்டோம் என்று பிரான்ஸ் தலைவர் குறிப்பிட்டார். வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற இரு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்புக்கு பின்னர் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில், உக்ரைனின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டை பாதுகாக்க தொடர்ந்து ஆதரவு அளிப்பதாக உறுதி பூண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கேய் லாவ்ரோவ,; உக்ரைனியப் போரைத் தடுத்துநிறுத்தும் வாய்ப்பை மேற்கத்திய நாடுகள் தவறவிட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

நேட்டோ கூட்டணி விரிவுபடுத்தப்படுவதை நிறுத்த வேண்டும் என்று ரஷ்யா முன்மொழிந்தது புறக்கணிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனுக்குச் சிறப்புப் பாதுகாப்புத் தகுதி கொடுக்கும்படி ரஷ்யா பரிந்துரைத்திருந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார். மேற்கத்திய நாடுகள் உக்ரைன் போரில் நேரடியாகப் பங்குவகிப்பதாக லாவ்ரோவ் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபட ரஷ்யா தொடர்ந்து தயாராய் இருப்பதாக அவர் கூறினார்.

ரஷ்யாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த, மேற்கத்திய நாடுகள் உக்ரைனுடன் கூட்டுச் சதியில் ஈடுபடுவதாகத் லாவ்ரோவ் சொன்னார். அவை ரஷ்யாவுக்கு அச்சுறுத்தலாய் விளங்குவதாக அவர் குறிப்பிட்டார்.



# கனடாவில் 4 பெண்களின் கொலைகளால் பரபரப்பு

கனடாவில் ஏற்கனவே பெண் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இருக்கும் ஆடவர் ஒருவர் மேலும் மூன்று கொலைகளுடன் தொடர்புபட்டுள்ளார்.

ரெபக்கா கொன்டொயின் என்ற 24 வயது பெண் ஒருவரை கொலை செய்ததாக 35 வயதான ஆடவர் மீது பொலிஸார் கடந்த மே மாதம் குற்றச்சாட்டு பதிவு செய்தது. இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை (01) அவர் மீது மேலும் மூன்று



குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் கொல்லப்பட்டிருக்கும் நான்கு பெண்களும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது ஒருவகையாக தொடர் கொலை என்பது பற்றி தீர்க்கப்பட வேண்டி இருப்பதாகவும் பழங்குடி பெண்கள் தொடர்புபட்டிருப்பது குறிப்பிடும்படியாக கவலை அழிப்பதாக உள்ளது என்றும் தலைமை பொலிஸ் அதிகாரி டன்னி ஸ்மித் குறிப்பிட்டுள்ளார்.

பழங்குடிப் பெண்கள் நாட்டில் ஆறு மடங்கு அதிகம் படுகொலைகளுக்கு முகம்கொடுப்பதாக கனடா அரசின் புள்ளிவிபரம் குறிப்பிடுகிறது.

# ஜப்பானில் பெண்ணை கொன்று நரமாமிசம் சாப்பிட்டவர் மரணம்



நெதர்லாந்து மாணவி ஒருவரை கொன்று அவரது மாமிசத்தை சாப்பிட்ட நிலையில் சிறை அனுபவிக்காது தப்பிய ஜப்பான் கொலையாளி இசை சகாவா தனது 73ஆவது வயதில் காலமானார்.

நிமோனியாவால் பாதிக்கப்பட்ட சகாவா கடந்த நவம்பர் 24 ஆம் திகதி மரணித்த நிலையில் அவரது இறுதிக் கிரியையில் உறவினர் மாத்திரம் பங்கேற்றனர் என்று அவரது இளைய சகோதரர் குறிப்பிட்டுள்ளார்.

1981இல் பாரிசில் கல்வி கற்ற சகாவா நெதர்லாந்து மாணவி ஒருவரை தனது வீட்டுக் விருந்துக்கு அழைத்தார். அப்போது அவர் அந்த மாணவியின் கழுத்தில் சூடு நடத்தி, அவரை கற்பழித்து கொன்றதோடு, மூன்று நாட்கள் அவரது உடலை வைத்து சாப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டபோதும் வழக்கு விசாரணைக்கு தகுதியற்றவர் என்று மனநல நிபுணர்கள் சான்றளித்தனர். ஆரம்பத்தில் பிரான்ஸில் மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அவர் பின்னர் ஜப்பானுக்கு நாடுகடத்தப்பட்டார்.

# 13,000 உக்ரைன் துருப்பினர் பலி



ரஷ்ய ஆக்கிரமிப்பு ஆரம்பித்தது தொடக்கம் 13,000 வரையான உக்ரைனிய படையினர் கொல்லப்பட்டிருப்பதாக அந்நாட்டின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

10,000 மற்றும் 13,000க்கும் இடைப்பட்ட துருப்பினர் கொல்லப்பட்டனர் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கியின் ஆலோசகரான மிகைலோ பொடொலியக் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழப்புகள் பற்றி உக்ரைன் தகவல் அளிப்பது மிக அரிதாக இருக்கும் நிலையில் பொடொலியக்கின் இந்தக் கருத்தை அந்நாட்டு இராணுவம் உறுதி செய்யவில்லை. தினசரி 100 முதல் 200 உக்ரைனிய படையினர் கொல்லப்படுவதாக அவர் கடந்த ஜூன் மாதம் கூறியிருந்தார்.

உக்ரைனிய தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த பொடொலியக், பொதுமக்களின் உயிரிழப்பு கணிசமாக இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

# மாணவியுடன் தொடர்பு: மனைவியை கொலைசெய்த ஆசிரியருக்கு சிறை



அவுஸ்திரேலியாவில் உயர்நிலைப் பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் ஒருவருக்கு மனைவியைக் கொன்றதற்காக 24 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ் டோசன் என்ற அந்த 74 வயது ஆடவர், அவரது மனைவி லினெட் டோசனைச் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் கொன்றதை ஒப்புக்கொண்டார்.

கிறிஸின் முன்னாள் மாணவரும் பிள்ளைப் பராமரிப்பாளருமான பதின்ம வயதுப் பெண்ணுடன் கள்ளத்தொடர்பு கொண்டிருந்த காலத்தில் கிறிஸ் அவரது மனைவியைக் கொன்றதாகக் கூறப்பட்டது.

அவரது சடலம் கண்டறியப்படவில்லை. 2018ஆம் ஆண்டில் டீச்சர்ஸ் பெட் என்ற ஆவணம் வெளியானதையடுத்து, அந்தக் கொலையில் சில முக்கியத் தடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன.

அதன் மூலம் புதியதொரு பொலிஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது

கிறிஸ் கள்ளத்தொடர்பு கொண்டிருந்த முன்னாள் மாணவி மீது தீவிர மோகம் கொண்டிருந்ததால் அவரது மனைவியைக் கொலை செய்ததாக நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அதனால் அவருக்கு 24 ஆண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவரது வயதின் காரணமாக அவர் சிறையிலேயே இறக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 டிசம்பர் 3 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN


**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.47 |
| லுஹர் | 12.01 |
| அஸர் | 03.23 |
| மஃரிப் | 05.53 |
| இஷா | 07.07 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் கார்த்திகை 17

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



### கைத்தொழில் வர்த்தக வலயங்களில்

# முதலீடு செய்ய முன்னணி சீன நிறுவனங்கள் விருப்பம் தெரிவிப்பு

## பிரதமருடனான சந்திப்பின்போது இணக்கம்



சில முன்னணி சீன முதலீட்டாளர்கள் அரசாங்கத்தினால் நிறுவப்பட்டுள்ள தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில் வர்த்தக வலயங்களில் பாரியளவிலான முதலீடுகளைச் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்த போதே (01) அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மற்றும் ஏனைய கைத்தொழில் வலயங்களில் கைத்தொழில்களை தாபிப்பதற்கு அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்காக முன்மொழியப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் விரைவில் சட்டமாக்கப்படுமென்றும், நேரடி வெளிநாட்டு முதலீடுகளுக்கு பல மேலதிக வசதிகள் வழங்கப்படுமென்றும் பிரதமர் உறுதியளித்தார்.

பிரதமருடனான சந்திப்பின் போது, ஷென்சென் சாங் ஜுவாங் நிர்மாணக் குழுமத்தின் தலைவர் ஜுவான் ஜாங், இலத்திரனியல் மற்றும் உயர் நுண்

06

# இலங்கையில் அரசியல் சீர்திருத்தம் அவசியம்

## அலிசப்ரியிடம் சமந்தா பவர் வலியுறுத்தல்



இலங்கையில் பொருளாதார சீர்திருத்தங்களுடன் அரசியல் சீர்திருத்தங்களும் அவசியம் என ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான நிறுவன நிர்வாகி சமந்தா பவர் வலியுறுத்தியுள்ளார். நாட்டின் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகள் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்து, புரிதலை மேம்படுத்துவதற்காக சமந்தா பவர், நேற்று முன்தினம் இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியை சந்தித்ததாக அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான நிறுவன பேச்சாளர் ஜெசிகா ஜென்னிங்ஸ் தெரிவித்தார்.

இலங்கையின் மீட்சி மற்றும் வளர்ச்சிக்கு அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான நிறுவனம் எவ்வாறு சாத்தியமான வழிகளை மேற்கொள்ள முடியும் என்று அவர்கள் இருவரும் கலந்துரையாடினர். இதன்போது, இலங்கையில் பொருளாதார சீர்திருத்தங்களுடன் அரசியல் சீர்திருத்தங்களும் தேவை என்று சமந்தா பவர் வலியுறுத்தியுள்ளார்.அத்துடன், சமாதானம் மற்றும் செழிப்பைப் பாதுகாக்க உதவுவதற்காக, இலங்கையுடனான தனது நீண்டகால கூட்டாண்மையை மேலும் வளர்ப்பதற்கு, உறுதியாக உள்ளது என்று அவர் உறுதியளித்ததாக, பேச்சாளர் ஜென்னிங்ஸ் கூறினார். கடந்த செப்டம்பரில் இலங்கைக்கு பயணம் செய்திருந்த சமந்தா பவர், இலங்கையின்

06

### மொணராகலை, கொட்டியாகலை பிரதேசத்தில்

# பயிர்ச்செய்கைக்காக 5,000 ஹெக்.காணி தற்காலிகமாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை

## சாகல ரத்நாயக்க தலைமையில் விசேட கலந்துரையாடல்



மொணராகலை, கொட்டியாகலை, கெபிலித்த பிரதேசத்தில் வனவளத் திணைக்களத்திற்கு சொந்தமான காடுகளை மீள் வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணிகளை, பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்துவது தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

எதிர்காலத்தில் ஏற்படவுள்ள உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் இந்தக் காணிகளை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின்

06

### சமூக வலைத்தள ஊடகங்களினூடாக

# 10 மாதங்களில் 12,000 துஷ்பிரயோக வழக்குகள்

## இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்



சமூக ஊடகங்களில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் கடந்த 10 மாதங்களில் 12,000 வழக்குகள் பதிவாகியுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார். பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் ஊடாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

பெற்றோர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை ஆசிரியர்களும் இது போன்ற சம்பவங்கள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு தகவல் தொழில்நுட்பத் துறையைப் பயன்படுத்தி டிஜிட்டல் கல்விக் கொள்கை தயாரிக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் நேற்று முன்தினம்(01) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

# இலங்கைக்கு 450,000 யூரோ நிதியுதவி வழங்கும் பிரான்ஸ்

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்காக பிரான்ஸ் 4 இலட்சத்து 50 ஆயிரம் யூரோக்களை வழங்கவுள்ளது.

அதன்படி இலங்கையின் எரிசக்தி கலவையில் இடைவிடாத புதுப்பிக்கத்தக்க சக்திகளின் பங்களிப்பை ஆதரிப்பதற்காக இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் Electricit de France (French Electric utility) ஆகியவற்றுடன் 450,000 யூரோக்கள் பெறுமதியான மானிய ஒப்பந்தத்தில் பிரென்ஸ் அபிவிருத்தி நிறுவனம் (AFD) கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் JeanFran ois Pactet முன்னிலையில் AFD பணிப்பாளர் Reda Souirgi, இலங்கை மின்சார சபையின் தலைவர் நளிந்த இளங்ககோன் மற்றும் போக்குவரத்து அமைப்புகளுக்கான EDF நிலைய பொறியியல் பிரதிநிதிகளினால் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

# காருக்குள் சிக்கி 17 வயது சிறுவன் உயிரிழப்பு

## பிலியந்தலையில் சம்பவம்; பொலிஸார் விசாரணை

பிலியந்தலை பிரதேசத்தில் வீடொன்றில் நிறுத்தப்பட்டிருந்த காருக்குள் சிறுவன் ஒருவர் சிக்கி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிலியந்தலை மாம்பேஜய மாவத்தையில் வசித்து வந்த 17 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதன்போது சிறுவனின் வீட்டில் யாரும் இருக்கவில்லை என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ தினத்தில் சிறுவனின் அக்காவும் தந்தையும் வேலைக்குச் சென்றிருந்த போது, சிறுவனின் சகோதரனும் தாயும் ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர்.

வீட்டில் யாருமின்றி தொலைக்காட்சி இயங்கிக்கொண்டிருந்ததை அறிந்த சிறுவனின் நண்பர் ஒருவர், சந்தேகத்தில் அவரது தந்தைக்கு தொலைபேசியில் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து, உயிரிழந்த சிறுவனின் தந்தை வீட்டிற்கு விரைந்து சென்று சோதனையிட்ட போது, வீட்டில் நிறுத்தப்ப ட்டிருந்த காரில் தனது மகன் சிக்கியிருந்ததைக் கண்டுள்ளார்.

சிறுவனை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், எனினும் சிறுவன் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில்

06

### பாராளுமன்ற வரலாற்றில் பதிவு:

# ஒரே நாளில் 6.000 மாணவர்கள் பாராளுமன்றை பார்வையிட வருகை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாகப் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு அதிக எண்ணிக்கையிலான பாடசாலை மாணவர்கள் நேற்று வருகை தந்ததாக படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் பல்வேறு பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 32 பாடசாலைகளைச் சேர்ந்த 6,000 மாணவர்கள் பாராளுமன்றத்தைப்

பார்வையிட நேற்று முன்தினம் வருகை தந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

உலகப் பாராளுமன்றங்களுடன் ஒப்பிடுகையில், ஒரே நாளில் இந்தளவு பாடசாலை மாணவர்கள் பாராளுமன்றத்திற்கு வருகை தந்தமை தொடர்பில் இது ஒரு சாதனையாக அமையுமென்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனா தொற்று பரவல் சூழ்நிலை காரணமாக மூடப்பட்டிருந்த பொது மக்கள் கலரியானது கடந்த செப்டெம்பர் 19 ஆம் திகதி முதல் பாடசாலை மாணவர்களுக்காகத் திறந்து விடப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்துள்ள பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 25,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாராளுமன்ற விவாதங்களை அவதானிக்க இதுவரை வருகை தந்துள்ளனர். எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பாராளுமன்றத்துக்கு வருகைதரும்

06



தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் இலக்கியத்துறைத்தலைவர் பேராசிரியர் இளையாம்பிள்ளை தலைமையில் "ஈழத்து இலக்கியம் அன்றும்இன்றும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற (30.11) ஆய்வில் இலங்கை எழுத்தாளர் ஞானம் சஞ்சிகை ஆசிரியர் ஞானசேகரன் கௌரவிக்கப்பட்டபோது...

# 60,000க்கும் மேற்பட்டோரை கொன்று குவித்தவர் பீல்ட் மார்ஷல் பொன்சேக்கா

## தற்போது ஜனநாயகம், மனித உரிமை பற்றி பேசுவது விந்தையானது

### சபையில் முன்னாள் அமைச்சர் விமல வீர திசாநாயக்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அறுபதாயிரத்துக்கும் மேற்பட்டோரை கொன்று குவித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா, இப்போது ஜனநாயகம்,மனித உரிமை பற்றி பேசுவது விந்தையாக உள்ளதாக முன்னாள் அமைச்சர் விமலவீர திசாநாயக்க பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய சரத் பொன்சேக்கா எம்பி தெரிவித்த கூற்றுகள் தொடர்பில் எதிர்க்கட்சியினரால் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதன் போது அவர் யானை மனித மோதல் மற்றும் யானையிடமிருந்து மக்களை பாதுகாப்பது தொடர்பான கருத்துக்களை முன்வைத்த போதே முன்னாள் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் விமலவீர திசாநாயக்க பொன்சேக்காவின் கூற்றுக்கு பதிலளிக்கும் வகையில் இவ்வாறு தெரிவித்தார்.

06

# சபையில் கூச்சலிட்ட சாணக்கியன், சுமந்திரன்: மீன் விற்க செல்லுமாறு ஆவேசமாக கூறிய திலீபன்

## உரையாற்றவிடாமையால் பொறுமையிழந்தார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி.க்களான சுமந்திரன், சாணக்கியன் இருவரையும் மீன் விற்பனை செய்யச் செல்லுமாறு வன்னி மாவட்ட எம்.பி. திலீபன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு, சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தின் போதே திலீபன் எம்.பி. இந்த ஆலோசனையை ஆவேசத்துடன் முன் வைத்தார். திலீபன் எம்.பி. உரையாற்றுவதற்கு முன்னர் உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா.சாணக்கியனுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான ஹர்ஷ டி.சில்வாவுக்குமிடையில் வாதப்பிரதிவாதம் ஏற்பட்டது. சாணக்கியன் எம்.பி. உரையாற்றுவதற்கான நேரம் முடிவடைந்ததையடுத்து அடுத்ததாக வன்னிமாவட்ட எம்.பி. திலீபனை உரையாற்றுமாறு சபைக்கு தலைமை தாங்கிய வீரசிங்க வீரசுமண எம்.பி.அழைத்தார். எனினும் திலீபன் எம்.பி. பேச முடியாதவாறு சாணக்கியன் எம்.பி. ஒழுங்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தினார். இதனால் திலீபன் எம்.பி.பேச முடியாத நிலை ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் சாணக்கியன் எம்.பி.யின் ஒழுங்குப் பிரச்சினைக்கு சபைக்கு தலைமை தாங்கிய வீரசிங்க வீரசுமண எம்.பி. சந்தர்ப்பம் கொடுக்காததால் சுமந்திரன் எம்.பி.யும் சாணக்கியனுக்கு ஆதரவாக குரல் கொடுத்தார்.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 243.55 | 254.88 |
| கனடியன் டொலர் | 266.31 | 278.52 |
| யூரோ | 376.93 | 392.40 |
| ஜப்பான் யென் | 2.6500 | 2.7587 |
| சிங்கப்பூர் டொலர் | 264.70 | 276.00 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 439.47 | 456.21 |
| சுவிஸ் பிராங்க் | 380.45 | 399.28 |
| அமெரிக்க டொலர் | 361.25 | 371.72 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 963.30 | கட்டார் ரியால் | 98.82 |
| குவைத் டினார் | 1,184.07 | சவூதி ரியால் | 96.60 |
| ஓமான் ரியால் | 943.30 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.87 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 17ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 08

### குறள் தரும் சிந்தனை



முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளமல்ல; இதயமார நேசிப்பதே உண்மையான நட்பாகும்.

## அனைத்து தரப்பினரும் பொறுமையுடன் ஒத்துழைப்பு வழங்குவதே அவசியம்!

ஆர்ப்பாட்டங்களை மீண்டும் முன்னெடுத்து நாட்டில் குழப்பகரமான நிலைமையை உருவாக்குவதற்கு ஒருசில தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. அவர்கள் இவ்வாறு முயற்சி செய்வார்களானால் நாட்டில் பொருளாதார நிலைமை மீண்டும் வீழ்ச்சிக் குச் சென்று விடுமென்பதை மறந்து விடலாகாது.

ஆர்ப்பாட்டங்கள் என்பதன் பேரில் நாட்டில் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதற்கு எந்தவொரு தரப்பினரும் முற்படுவார்களேயானால், பொறுப்புள்ள அரசாங்கமென்ற வகையில் மக்களின் பாதுகாப்பு கருதி நாட்டில் அமைதியைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்பதை மறந்து விடலாகாது. நாட்டில் ஜனநாயகத்தன்மை சீரழிவதற்கு அரசாங்கம் இடமளிக்காதென்பதையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டை மீளக்கட்டியெழுப்புவதாயின் அரசியல் பேதங்களுக்கு அப்பால் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதே அவசியமாகும். நாட்டின் நலன்களை மறந்து அரசியல் ஆதாயம் தேடி அரசியல்வாதிகள் செயற்படுவார்களானால், இன்றைய பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டெழுவதென்பது இயலாத காரியமாகிப் போய் விடுமென்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நாடு இப்பொழுதுதான் வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மீண்டெழுந்து கொண்டு வருகையில், மீண்டும் அமைதியின்மையை கட்டவிழ்த்து விடுவதற்கு எவருமே இடமளிக்கலாகாது. அமைதியை விரும்புகின்ற மக்கள் இவ்வாறான உள்நோக்கம் கொண்ட முயற்சிகளுக்கு எதிராக குரல் கொடுப்பது அவசியம். பொறுமையே இன்றைய வேளையில் மக்களுக்கு அவசியமாகின்றது. ஜனாதிபதி முன்னெடுக்கும் பொருளாதார மீட்புத் திட்டங்களுக்கு அரசியல்வாதிகள் அனைவரும் நிபந்தனையின்றிஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியம். நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசியமானது அதுதான்.

இந்த விடயத்தை எமது அரசியல்வாதிகள் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இது அரசியல் செய்வதற்கான வேளையல்ல. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எமது நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. நாடு இப்பொழுதுதான் படிப்படியாக மீண்டெழுந்து கொண்டு வருகின்றது. நாட்டை மீளக்கட்டியெழுப்புவதே அனைத்து தரப்பினரதும் கடமையாக இருக்க வேண்டும்.

ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதனாலோ அல்லது அமைதியின்மையை ஏற்படுத்துவதாலோ நெருக்கடி நிலைமைக்கு தீர்வு ஏற்பட்டு விடப் போவதில்லையென்பதை அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய இக்கட்டான நிலைமையிலிருந்து விடுபடுவதற்கான காத்திரமான நடவடிக்கைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக அனைத்துத் தரப்பினரும் கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைப்பை வழங்க வேண்டியதே நாட்டின் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒரே வழியாகும்.

நாட்டில் முன்னர் மிகவும் முக்கியமான சிக்கலாக இருந்தது எரிபொருள் பிரச்சினை ஆகும். சமையல் எரிவாயுவுக்கான கியூவரிசைகள் முடிவுக்கு வந்து விட்டன. பெற்றோல், டீசல் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதிலும் சிரமங்கள் பெருமளவில் குறைந்து கொண்டு வருகின்றன. கியூவரிசைகள் விரைவில் இல்லாமல் போய் விடுமென்பதே நம்பிக்கையாகும்.

அதே போன்று பொருளாதார சரிவும் மீண்டும் சீராகி விடுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. கடந்த காலத்தில் அரசினால் கடைப்பிடிக்கப்பட்ட தவறான பொருளாதாரக் கொள்கைகளும் இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமென்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. அவ்வாறான தவறான பொருளாதாரக் கொள்கைகளைச் சீரமைத்து, நடைமுறைச் சாத்தியமான வழியில் நாட்டை முன்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே மக்கள் சிறிது காலம் பொறுமை காக்க வேண்டியது அவசியமாகின்றது.

பொருளாதார வீழ்ச்சிக்குள் தள்ளப்பட்டிருந்த எமது நாடு படிப்படியாக மீண்டெழுந்து வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை மீண்டும் முன்னைய நிலைமைக்குக் கொண்டு வருவதென்பது ஒரே நாளிலோ அல்லது ஓரிரு மாதங்களிலோ சாத்தியமாகக் கூடிய காரியமல்ல. அதற்காக நாம் வருடக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது.

பொறுமையும் அர்ப்பணிப்புமே இன்றைய வேளையில் மக்களுக்கு அவசியமாகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இன்றைய அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற பொருளாதார மீட்புத் திட்டங்களுக்கு அரசியல்வாதிகள் அனைவரும் நிபந்தனையின்றிஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியம்.

பொருளாதார மீட்சித் திட்டங்கள் ஜனாதிபதியின் முயற்சியினாலேயே முன்னேற்றமடைந்துள்ளன வென்பதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

நாம் சில வலிகளைப் பொறுத்துக் கொண்டு சில காலம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. பொருளாதாரம் பழைய நிலைமைக்கு வருமென்ற நம்பிக்கை தென்படுகின்றது. ஆனால் அதற்கு சில காலம் செல்லுமென்பதை மறந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# எடிசன் திரை விருது பட்டியலில் ஐஸ்வர்யா ராய், நயன்தாரா உட்பட முன்னணி நடிகைகள் பலர்

தற்போது சமூக வலைதளங்களில் அதிகப்படியாக பேசப்பட்டு உலகத் தமிழர்களின் வாக்குகளை குவித்து வரும் தமிழ்த் திரை உலகினர்களின் முதல் தரவரிசை பட்டியலில் சிறந்த நடிகைகளில் வரிசையில் ஐஸ்வர்யா ராய், நயன்தாரா, நித்யா மேனன், கீர்த்தி சுரேஷ், காயத்ரி, சாய் பல்லவி, பிரகிடா ஆகியோர் உள்ளனர்.

இரண்டாம் தர வரிசையில் ரசிகர்களுக்கு மிகவும் பிடித்தமான நடிகைகள் வரிசையில் சமந்தா, திரிஷா, பூஜா ஹெக்டே, ஸ்ரீநிதி செட்டி, மாளவிகா மோகனன், பிரியா பவானி சங்கர் ஆகியோர் தேர்வு பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

நவம்பர் 20ஆம் திகதி முதல் பல்வேறு நாடுகளில் உள்ள தினசரி நாளிதழ்கள், பண்பலைகள், தொலைக்காட்சிகள், சமூக ஊடகங்கள், வலையொலிகள், அதிகமாக பகிரப்பட்டு ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வரும் தங்களுக்கு பிடித்தமான நடிகைகளை edisonawards.in என்ற இணையத்திலும் எடிசன் அவார்ட்ஸ் செயலிலும் மற்றும் பல்வேறு சமூக ஊடகங்களின் மூலம் ரசிகர்கள் வாக்களித்து வருகின்றனர்.

எடிசன் விருது குழு இணையத்தில் வாக்குகளை பற்றி ஆராயும்போது மேற்கத்தேய நாடுகள், ஆசிய பசிபிக் நாடுகள், ஐரோப்பா மற்றும் வளைகுடா நாடுகளில் அதிகமாக வாக்களித்து இருப்பது தெரிய வருகிறது.






























எடிசன் அவார்ட்ஸ் இணையத்திலும் செயலிலும் மற்றும் சமூக ஊடகங்களின் பார்வையாளர்களில் சுமார் 35 சதவீதம் வாக்களித்துள்ளனர். முந்திய காலங்களில் விட அதிகப்படியான வாக்குகளை பெற வாய்ப்புள்ளது என எடிசன் விருது குழு தலைவர் செல்வகுமார் மற்றும் எடிசன் இயக்குனர் மலேசியா தீனா ஆகியோர் தெரிவித்தனர்.

# இஸ்ரேலின் கடல், நில முற்றுகைகளால் பட்டினியை எதிர்நோக்கும் பாலஸ்தீனம்!

பாலஸ்தீனத்தின் காசாவில் கடந்த வருடத்தில் மட்டும் வறுமை 64 சதவீதமாக உயர்ந்துள்ளதாக பாலஸ்தீனிய சர்வதேச உறவுகளுக்கான கவுன்சில் தெரிவித்துள்ளது. பாலஸ்தீனத்தில் நீடித்த மோதல்கள், பொருளாதார தேக்கநிலை இன்னமும் தொடர்கின்றன. அதேவேளை தடை செய்யப்பட்ட வர்த்தகம் மற்றும் வளங்களுக்கான அணுகல், வேலை வாய்ப்பின்மை மற்றும் வறுமை வீதங்களுடன் இணைந்து, பட்டினியும் அதிகரித்துள்ளது.

கடந்த 16 ஆண்டுகளாக இஸ்ரேலின் கடலோரப் பகுதியில் விதிக்கப்பட்ட முற்றுகையால், இந்த பகுதியில் வறுமை 64 சதவீதமாக உயர்ந்துள்ளதாக பாலஸ்தீனிய சர்வதேச உறவுகளுக்கான கவுன்சில் அறிக்கையில் தெரிவித்துள்ளது.



**2014 இற்குப் பிறகு காசா மிகவும் தீவிரமான இராணுவ பாதிப்புகளைச் சந்தித்தது. 16 ஆண்டுகால இஸ்ரேலின் கடல், நிலம் மற்றும் வான்வழி முற்றுகையின் ஒட்டுமொத்த தாக்கத்தால் காசாவின் சமூக பொருளாதாரத் தளம் தள்ளாடுகிறது.**

கொவிட் 19 தொற்று வெடிப்பதற்கு முன்பாக சுமார் மூன்றிலொரு பங்கு மக்களால் 32.7 சதவீதம் (1.6 மில்லியன் மக்கள்) சத்தான உணவை பெற முடியவில்லை. அத்துடன் உணவுப் பற்றாக்குறை பெண்களிடையே அதிகமாக உள்ளது. 33.7 சதவீதம் குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையாலும், பாதுகாப்பற்ற நிலையாலும் வாடுகின்றன.

பாலஸ்தீனிய சர்வதேச கவுன்சில் தகவலின்படி 2007 ஆம் ஆண்டு ஹமாஸ் அரசு கடலோரப் பகுதியின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியதை தொடர்ந்து, 2 மில்லியனுக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் வசிக்கும் காசா பகுதி இஸ்ரேலிய முற்றுகையின் கீழ் உள்ளது. ஹமாஸ் ஆளுகைக்கு உள்பட்ட கடலோரப் பகுதியானது 360 சதுர கி.மீ நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.

இது உலகின் மிகவும் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு வசிக்கும் 80 சதவீத மக்கள் மனிதாபிமான உதவி மற்றும் சர்வதேச அமைப்புகளின் மானியங்களை நம்பியுள்ளனர். காசா பகுதியில் 16 ஆண்டுகளாக இஸ்ரேல் விதித்துள்ள முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவர அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்று கவுன்சிலின் தலைவர் கூறினார்.

அவர்கள் உணவு, வீடு, உடை உள்ளிட்ட தங்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழியின்றி உள்ளனர்.

மே 2021 இல் கிழக்கு ஜெருசலேம் மற்றும் மேற்குக் கரை முழுவதும் பெரிய அளவிலான அமைதியின்மையின் பின்னணியில், 2014 இற்குப் பிறகு காசா மிகவும் தீவிரமான இராணுவ பாதிப்புகளைச் சந்தித்தது. 16 ஆண்டுகால இஸ்ரேலின் கடல், நிலம் மற்றும் வான்வழி முற்றுகையின் ஒட்டுமொத்த தாக்கத்தால் காசாவின் சமூக பொருளாதாரத் தளம் தள்ளாடுகிறது. கொவிட் 19 உடன் பாதிப்புகள் மேலும் அதிகரித்துள்ளன.

உலக உணவுத் திட்டம் (WFP) 1991 முதல் பாலஸ்தீனத்தில் இயங்குகிறது. இது மிகவும் பாதிக்கப்படக் கூடிய அகதிகள், பொதுமக்களுக்கு உணவு உதவி மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குகிறது. அத்துடன் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் உட்பட வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கான அரசாங்க முயற்சிகளை WFP வழங்குகிறது.

பாலஸ்தீனப் பிரச்சினையை நம் காலத்தின் மாபெரும் தார்மிகப் பிரச்சினை என்றார் நெல்சன் மண்டேலா. பாலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை, அவர்களின் துயரத்தை இதைவிடச் சுருக்கமாக அதே நேரத்தில் மனத்தைத் தைக்கும் விதமாக ஒருவர் கூற முடியாது.

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் இரண்டு சம்பவங்கள் உலகை உலுக்கிக் கொண்டிருந்தன. இவற்றில் ஒன்றான தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சி நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பின்னர் 1994இல் முடிவுக்கு வந்தது.

ஆனால் 1940களில் தொடங்கிய பாலஸ்தீன மக்களின் துயரம் இன்றளவும் தொடர்கிறது. பாலஸ்தீன சுதந்திரப் போராட்டமும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது என பாலஸ்தீனம் பற்றிய நெல்சன் மண்டேலாவின் கருத்தை எவராலும் மறுக்க முடியாது.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

## மேலதிக உதவிகள்...

டிசம்பர் 4ஆம் திகதி வரை அமைச்சர் அமெரிக்காவில் தங்கியிருப்பார். அவரது பயணத்தின் போது, அமெரிக்க வெளிவிகார அமைச்சர் பிளிங்கன், காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தின் பல பிரதிநிதிகளையும் சந்திக்க உள்ளார்.

## இராமேஸ்வரத்திலிருந்து...

கைப்பற்றப்பட்ட மஞ்சள் மூட்டைகள் மற்றும் கைதான நபர் மண்டபம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு குற்ற நுண்ணறிவு பிரிவு மற்றும் கடலோர பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்டபோது, அந்த வழியாக வந்த வாகனங்களை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது 04 மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள், அந்த வாகனங்களை நிறுத்திவிட்டு அங்கிருந்து தப்பி ஓடினர். பொலிஸார் விரட்டிச் சென்று 17 வயது சிறுவன் ஒருவனை கைது செய்தனர். விசாரணையில் அவர், வேதாளை கடற்கரையோரத்தில் நிறுத்தி வைத்திருந்த நாட்டுப்படகொன்றில் 35 மூடைகளில் மஞ்சள் அடுக்கி வைத்திருப்பதாகவும், அதனை இலங்கைக்கு கடத்த இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். பொலிஸார் விரைந்து சென்று அந்த நாட்டுப்படகையும், 35 மஞ்சள் மூடைகளையும் கைப்பற்றினர். அந்த மூடைகளில் 02 ஆயிரத்து 100 கிலோ மஞ்சள் கட்டிகள் இருந்தன.

இதே வேதாளை கடற்கரைப் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயற்சித்த சுமார் 300 கிலோ போதைவஸ்து கைப்பற்றப்பட்ட சம்பவத்துக்கு மறுநாளே இப் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 2,100 கிலோ மஞ்சள் பிடிபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வெட்டுப்புள்ளிகள்...

சந்திப்பில் கலந்து கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க இவ் விடயத்தை தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குள் பிரவேசித்து வெட்டுப் புள்ளிகள் தொடர்பான விபரங்களக அறிந்து கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் admission.ugc.ac.lk/selection தளத்திற்குள் பிரவேசித்து அறிந்துகொள்ளமுடியும். அத்துடன் இன்றைய தினகரன் மின்னிதழின் 15 ஆம் பக்கத்தில் அதனை பார்க்கலாம்.

## இலங்கை இராணுவத்திடமிருந்து...

உலகத் தலைவர்கள் பயணம் செய்யும் போது முக்கியமான மற்றும் இரகசியமான ஆவணங்களை எடுத்துச் செல்ல ஒரு சிறப்பு Attach Case பயன்படுத்துவது மரபாகும். இந்த உலக பாரம்பரியத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய ஜனாதிபதி, சர்வதேச தரத்துக்கமைவாக அவ்வாறான Attach Case ஒன்றை உருவாக்கும் பணியை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்தார்.

இதன்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட பணிப்புரைக்கமைய, இராணுவத் தளபதியின் நேரடி கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதலின் கீழ், ஜனாதிபதி செயலகத்தின் விவரக்குறிப்புகளின்படி, மின்சார மற்றும் இயந்திர பொறியியல் பணிப்பாளர் தலைமையிலான துறைசார் நிபுணர்கள் குழு, சிறப்பு தொழில்நுட்பத்துடன் தனித்துவமான வடிவமைப்பாக இந்த Attach Case உருவாக்கியது.

இது ஒரு ஜனாதிபதிக்கு பின்னர் மற்றுமொரு ஜனாதிபதி பயன்படுத்தக்கூடிய நீடித்து நிலைத்திருக்கும் ஒன்றாக இருக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியிருந்ததுடன், அதற்கமைய பாதுகாப்பான மற்றும் திட்டமிடப்பட்ட முறையில் உயர் தர தோலைப் பயன்படுத்தி இந்தப் Attach Case வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கையொப்பத்தைப் பெறுவதற்காக, அமைச்சுகள் நாளாந்தம் ஜனாதிபதி அலுவலகத்துக்கு அதிக எண்ணிக்கையிலான கோப்புகளை அனுப்புகின்றன, மேலும் ஆவண கோப்புறைகளுக்காக செலவிடப்படும் பணத்தை குறைக்க அனைத்து அமைச்சுகளுக்கும் இத்தகைய Attach Case யை பயன்படுத்துவதற்குள்ள சாத்தியக் கூறுகளை ஜனாதிபதி சுட்டிக்காட்டியதுடன், தேவையான Attach Case களை இராணுவம் தயாரிக்குமென்றும் தெரிவித்தார்.

இவ்வாறு உயர்தரத்துடன் வடிவமைக்கப்பட்ட சிறப்பு Attach Case யைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, அதனைப் பார்வையிட்டதுடன், இதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து கலைஞர்களையும் பாராட்டினார்.

இந்த நிகழ்வில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.

## மின்சாரக் கட்டண திருத்தம் ...

முன்வைத்து வந்தன.

இந்த நிலையில், இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "தற்போதைய, அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஜனவரி மற்றும் ஜூன் மாதத்தில் கட்டணத்தை அதிகரிக்க அனுமதிவழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தால் காலநிலை மாற்றத்துடன் பாரிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும். மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுசெய்யும் வகையில் இந்த கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது. கட்டணத்தை அதிகரிப்பதால் அதனை செய்யமுடியாது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மீள ஆரம்பமாகவுள்ள...

நாளொன்றுக்கு ஏறக்குறைய 60,000 திரிபோஷா பொதிகளை உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகம் செய்வதோடு தாய்மார்களுக்கான திரிபோஷா உற்பத்தி தொடரும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

## மஹிந்த ராஜபக்ஷவுக்கு...

இணைப்பாளர் கலாநிதி இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா ஆகியோரும் கலந்து சிறப்பித்ததுடன் அரசியல் பிரமுகர்கள், சமயத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சமய வழிபாட்டில் கலந்து கொண்டதன்பின் ஆலய நிர்வாகத்தினர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சச்சிதானந்த குருக்கள் பூஜை வழிபாடுகளை நடத்தினார்.

## இலங்கைக்கு கடத்தவிருந்த...

நாகை மாவட்டத்திலிருந்து இலங்கைக்கும் மற்ற மாநிலங்களுக்கும் படகு மூலம் கஞ்சா மற்றும் போதை பொருட்கள் கடத்தப்படுவது தொடர்ந்து வருகிறது. இதனை தடுக்க சுங்கத்துறை அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்நிலையில் நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து இலங்கைக்கு படகில் கஞ்சா கடத்தப்படுவதாக நாகப்பட்டினம் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து வேளாங்கண்ணி வெள்ளாற்றின் பாலத்தில் வெள்ளிக்கிழமை அதிகாலை சுங்கதுறை அதிகாரிகள் படகில் சென்று திடீர் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அங்கு சந்தேகபடும்படி நின்ற கண்ணாடி இழை படகில் ஏறி சோதனை செய்தனர். இதன்போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 09 கஞ்சா மூட்டைகளை கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர். இதன் மொத்த எடை 200 கிலோ என்பதுடன் இந்திய ரூபா மதிப்பில் சுமார் 02 கோடி ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

## இலங்கையில் தயாரான...

முன்னாள் மாணவரான கனிஷ்க மாதவ என்பவரின் படைப்பாற்றலால் இந்த பேருந்து தயாரிக்கப்பட்டதாக சனிரோவின் தலைவர் நிலந்த தில்ருக் தெரிவித்தார்.

22 அடி நீளமும், 5 அடி 6 அங்குல அகலமும் கொண்ட இந்த பேருந்து 660 சீ.சீ என்ஜின் திறனை கொண்டுள்ளது. அரசாங்கம் அனுசரணை வழங்குமாயின் நாட்டிலேயே பேருந்து இயந்திரத்தை தயாரித்து உயர்தர பேருந்தை உற்பத்தி செய்ய முடியும் எனவும் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## வங்கிக் கணக்குகளை...

உட்பட எட்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளது.

நவம்பர் 24 ஆம் திகதி சந்தேக நபர்கள் வணிகரின் வங்கிக் கணக்கிற்கு அனுமதியற்ற அணுகலைப் பெற்று அதிலிருந்து 13.7 மில்லியன் ரூபாயை மற்றுமொரு கணக்குக்கு மாற்றியுள்ளனர். கைதான சந்தேக நபர்கள் நவம்பர் 30ஆம் திகதி கொழும்பு நீதவான் திலின கமகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, டிசெம்பர் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை நாட்டில் கணினி குற்றங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவித்த பொலிஸார், பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும், வங்கிக் கணக்குகளை அடிக்கடிச் சரிபார்த்து பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள்...

உள்ளது என தெரிவித்தார்.

இதன்போது எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் மேலும் தெரிவித்த அவர், "சிலர் எழுந்து நின்று பேச வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும்.

நீங்கள் அதை நிறுத்த முயற்சிக்கவில்லை. மிகவும் வருத்தமாக உள்ளது. அணியை நிர்வகிப்பது எனது பொறுப்பு அல்ல, அது உங்களுடையது" என தெரிவித்தார்.

## துறைமுக அதிகார சபையில் ...

இந்தக் குழுவிற்கு அதிகாரசபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் குறித்து முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குழுவிற்கு கிடைத்த அனைத்து முறைப்பாடுகளையும் விசாரித்து, குழுவின் அறிக்கை 6 மாதங்களுக்குள் விடயதிற்குப் பொறுப்பான அமைச்சரிடம் ஒப்படைக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன் சந்திரா தெரிவித்தார்.

## அரச ஊழியர்களது...

இது வெறும் அரசியல் ஆர்வமுள்ள ஒருவரால் சுமத்தப்படும் குற்றச்சாட்டாக இருக்கலாம். அடுத்த ஆண்டுக்கான அரசின் செலவு சுமார் ரூ. 7885 பில்லியன். அதில் 10 சதவீதம் சமூக நலத்துறைக்கும். இது கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான செலவினங்களை விட அதிகமாகும். கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு 1,000 பில்லியன் ரூபாவுக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாது என நினைக்கிறேன். நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்காக பதிவுசெய்யப்பட்ட 5.8 மில்லியன் குடும்பங்களில், சுமார் 3.4 மில்லியன் குடும்பங்கள் நலத்திட்ட உதவிகளைப் பெறும் நிலையில் உள்ளன. தகுதியான குடும்பங்களைத் தேர்ந்தெடுக்கும் போது இந்த எண்ணிக்கையில் குறிப்பிட்ட தொகை குறைக்கப்படும். இந்த சதவீதம் குறிப்பிட்ட அளவு குறைக்கப்பட்டாலும், அந்த அம்சத்தையும் கருத்தில் கொண்டு இந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளோம்.

## முதலீடு செய்ய... (03 ஆம் பக்கத் தொடர்)

உற்பத்திகள், சூரிய அனல் மின்சாரம், அதிவேக சக்தி சேமிப்பு அலகுகள், ஸ்மார்ட் கிரிட், ஒளிமின்னழுத்த மின் ஆலைகள் போன்ற பல துறைகளில் முதலீடு செய்ய முடியுமென குறிப்பிட்டார். இந்நிறுவனம் கிரேக்கம், மொராக்கோ, மங்கோலியா, கலிபோர்னியா, அமெரிக்கா, தெற்கு அவுஸ்திரேலியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளில் சக்தி வள கைத்தொழில் துறையில் நிர்மாண திட்டங்களில் முதலீடு செய்துள்ளது.

## இலங்கையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

மிகவும் பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்களின் அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்வது உட்பட, அதன் சிக்கலான நெருக்கடியைத் தீர்க்க தமது அர்ப்பணிப்பை அறிவித்திருந்தார்.

## பயிர்ச்செய்கைக்காக... (03 ஆம் பக்கத் தொடர்)

யின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் (01) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

மொணராகலை, கொட்டியாகலை, கெபிலித்த பிரதேசத்தில் வனவளத் திணைக்களத்திற்கு சொந்தமான சுமார் 8000 ஹெக்டெயர் காணி, காடுகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. காடு வளர்ப்பதற்காக மரக்கன்றுகள் தயார் செய்யப்பட்டுள்ள, 3000 ஹெக்டெயர் பரப்பளவில், காடு வளர்ப்புப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. எஞ்சியுள்ள 5000 ஹெக்டெயர் காணிகளில், காடுகளை வளர்ப்பதற்கு தேவையான வசதிகள் தயார் செய்யும் வரை விவசாயிகளுக்கு தற்காலிகமாக பயிர்ச்செய்கைக்கு பகிர்ந்தளிப்பது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## காருக்குள் சிக்கி... (03 ஆம் பக்கத் தொடர்)

கல்கிஸை குற்றப்பிரிவின் புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பிலியந்தலை பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஒரே நாளில் 6.000... (03 ஆம் பக்கத் தொடர்)

தரும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 60,000கும் மேற்பட்டோரை.... (03 ஆம் பக்கத் தொடர்)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆற்றிய உரை தொடர்பில் சபையில் தர்க்கம் ஏற்பட்டது.அவரது உரைக்கு ஆளும் கட்சி எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். குறிப்பாக முன்னாள் வன ஜீவராசிகள் அமைச்சரான விமலவீர திசாநாயக்க சரத் பொன்சேக்காவுடன் கடுமையாக வாக்குவாதப்பட் டார்.

சரத் பொன்சேகாவின் கருத்துக்களில் சேறு பூசல்கள் மாத்திரமே உள்ளதாக அரச தரப்பு எம்.பி. க்கள் குற்றம்சாட்டினர். அவர்கள் சரத் பொன்சேக்காவுக்கு எதிராக ஒழுங்குப்பிரச்சினை எழுப்பினர். இதனால் சபையில் கூச்சல்,குழப்பம் ஏற்பட்டது.

இதன்போது, 'உறுப்பினர்களே! இந்த பழக்கத்தை நிறுத்திக் கொள்ளுங்கள்' என சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறாயின் சேறு பூசலையும் நிறுத்த சொல்லுங்கள். வனஜீவராசிகள் அமைச்சின் விவாதத்தின் போது சேறு பூசல்களே இடம்பெறுகின்றன என்றும் காலி முகத்திடலுக்கு மிருகங்கள் வந்தால் அடித்து விரட்டுங்கள் என எம்.பி.க்கள் பலரும் கூச்சலிட்டனர்.

பதிலுக்கு சரத் பொன்சேகாவும் ஆவேசமாக கூச்சலிட்டார் .

இதன்போது எழுந்த முன்னாள் வன ஜீவராசிகள் அமைச்சர் விமலவீர திஸாநாயக்க எனது பெயரை சரத் பொன்சேக்கா குறிப்பிட்டதால் பதிலளிக்க வேண்டும் என்றார்.

இதன்போது மேலும் தெரிவித்த விமலவீர திஸாநாயக்க, யானை தடுப்பு கால்வாய் அமைத்தது முட்டாள் தனமானதென அவர் குறிப்பிட்டார்.இவர் அமைச்சராக பதவி வகிக்கும் போது என்ன செய்தார். ஒன்றும் செய்யவில்லை. அரசாங்கத்தின் செலவு இல்லாமல் யானை கால்வாய் அமைத்தேன்,அதனால் இன்று அந்த பிரதேச மக்கள் பாதுகாப்பாக உள்ளார்கள்.

60 ஆயிரம் 70 ஆயிரம் பேரை கொன்று குவித்தவர். இன்று எமக்கு ஜனநாயகம் பற்றி குறிப்பிட வருகிறார். யானை மனித மோதல் பற்றி கவலைப் படுகின்றார் சண்டியர்களை பாதுகாத்த பீல்ட் மார்ஷல் எமக்கு ஆலோசனை வழங்க வருகின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

## சபையில் கூச்சலிட்ட... (03 ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு சபைக்கு தலைமை தாங்கிய எம்.பி.க்கும் சாணக்கியன். சுமந்திரன் ஆகிய எம்.பி.க்களுக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டதனால் தனது உரையை ஆரம்பிப்பதும் பின்னர் நிறுத்துவதுமாக திலீபன் எம்.பி.தடுமாறிக் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த திலீபன் எம்.பி. ''ஐயோ.. இது என்ன மீன்கடையா,,? தயவு செய்து கத்தாதீர்கள். மீன்கடையில் கத்துவது போல் கத்துவதென்றால் பேசாமல் இருவரும் மீன்விற்கப்போங்கள்" என்றார்.

இதன் பின்னர் சுமந்திரன், சாணக்கியன் எம்.பி.க்களை அமைதிப்படுத்தி திலீபன் எம்.பி.பேசுவதற்கு சபைக்கு தலைமைதாங்கிய வீரசுமன வீரசிங்க வழிவகை செய்தார்.

## இம்முறை 44,000 பேரை...

தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (02) வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்விடயத்தை தெரிவித்த அவர் இது தொடர்பில் மேலும் தெளிவுபடுத்துகையில்,

2021 ஆம் ஆண்டு 02 இலட்சத்து 83,616 பேர் உயர்தர பரீட்சைக்கு தோற்றினர். அவர்களில் ஒரு இலட்சத்து 71,497 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 91,115 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பித்தவர்களில் 43,927 பேர் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

இவர்களில் உயிரியல் விஞ்ஞான பீடத்திற்கு 9,749 மாணவர்களும் , பௌதீக விஞ்ஞான பீடத்திற்கு 8,020 மாணவர்களும் , வணிக பீடத்திற்கு 7,701 மாணவர்களும் , கலை பீடத்திற்கு 11,314 மாணவர்களும் , பொறியியல் தொழிநுட்ப பீடத்திற்கு 2,236 மாணவர்களும், உயிர் அமைப்பு தொழில்நுட்பட் தொழிநுட்ப பீடத்திற்கு 1,543 மாணவர்களும் , ஏனைய பீடங்களுக்கு 665 மாணவர்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

இம்முறை நான்கு புதிய பீடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் தலா 50 மாணவர்கள் என 200 மாணவர்களை உள்வாங்க எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிதி பொருளாதார பீடம் மற்றும் புத்தாக்க இசை தொழிநுட்பம் மற்றும் தயாரிப்பு ஆகியவை புதிய பீடங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதே போன்று ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழி மற்றும் பயன்பாட்டு மொழியில் பீடமும், வவுனியா பல்கலைக்கழகத்தில் வங்கி மற்றும் காப்புறுதி பீடமும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் , மென்பொருள் பொறியியல் மற்றும் தகவல் அமைப்புக்கள் ஆகிய பீடங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை ஏனைய சில பல்கலைக்கழகங்களில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்றார்.

## வறுமையை பயன்படுத்தி...

கொழும்பு குற்றவியல் விசாரணை பிரிவின் பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் இந்த சம்பவம் தொடர்பான விடயங்களை முன்வைத்து, விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கூறியுள்ளனர்.

ஒரு சிறுநீரகம் ஒரு கோடியே 20 இலட்சம் முதல் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் ஏற்கனவே 5 பேர் குறித்த மருத்துவமனைக்கு சிறுநீரகங்களை வழங்கியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் அவர்களுக்கு அதுவரை அதற்கான பணம் வழங்கப்படவில்லை என கண்டறியப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றவியல் விசாரணை பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். பொரள்ளை கொட்டா வீதியில் உள்ள தனியார் மருத்துமனையிடம் இந்த நபர்கள் சிறுநீரகங்களை வழங்கியுள்ளனர். சிறுநீரகங்களை வழங்கியவர்கள் அனைவரும் வறிய குடும்பங்களை சேர்ந்தவர்கள் எனவும் அவர்களில் 5 மாத குழந்தைக்கு பாலுட்டும் தாய் ஒருவரும் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் கொழும்பு புளுமெண்டால் பிரதேசத்தில் வசித்து வரும் ஆண் மற்றும் பெண்ணொருவர் ஊடாக இந்த சிறுநீரக வியாபாரம் நடப்பதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர்கள் சிறுநீரகங்களை வழங்கும் நபர்களை மருத்துமனையுடன் தொடர்புபடுத்தும் தரகு வேலையை செய்து வருவதாகவும் தெரியவந்துள்ளது. சிறுநீரகங்களை பெற்றுக் கொள்ளும் போது நடத்தப்படும் பரிசோதனைகளை செய்வது சிரமம் என்பதால், அதனை நாராஹென்பிட்டியில் உள்ள மூன்று தனியார் மருத்துவமனைகள் மூலம் மேற்கொள்வதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மேலும் விசாரணைகளை நடத்தி சாட்சியங்களை பதிவு செய்ய உள்ளதாக கொழும்பு குற்றவியல் விசாரணை பிரிவினர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர். இதனடிப்படையில் விசாரணைகளை நடத்தி சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதவான், பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## அரச அதிகாரிகளுக்கு...

வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டளவில் இந்த நாட்டிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தினூடாக அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும், 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் இதனை நிறைவு செய்ய வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். சில நிறுவனங்கள் ஏற்கனவே இவ் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். இப்பயிற்சித் திட்டம் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து செயல்படுத்தப்படும். இப்பயிற்சித் திட்டம் ஐந்து நாள் நடத்தப்படும் திட்டமாகும், இது ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசு ஊழியர்கள் வெளிநாடுகளில் தகவல் தொழில்நுட்பத்துறையில் பல ஆண்டுகள் பணியாற்றலாம், சம்பளம் இல்லாமல் விடுமுறை எடுத்து இந்த நாட்டிலேயே அதே தொழிலில் பணியாற்றலாம்.

அத்துடன் உயர்தர கலை மாணவர்களுக்கும் இந்த தகவல் தொழில்நுட்ப பாடத்தை கற்பிக்கிறோம்.

அத்துடன் கடந்த ஆண்டு தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை எம்மால் சம்பாதிக்க முடிந்தது அடுத்த ஆண்டு UDI என்ற திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

பிறக்கும் ஒவ்வொருவருக்கும் டிஜிட்டல் எண் பெற்றுக்கொடுக்கப்படும். அவர்கள் வளர்ந்து15 வயதாகும்போது தனித்தனி யுனிக் எண் வழங்கப்பட்டு, அவர்களின் உயிரியல் தரவுகள் ஒரே இடத்தில் சேமிக்கப்படும். அதன் மூலம் அடையாள அட்டை, கடவுச் சீட்டு உள்ளிட்ட பல சேவைகளை மேற்கொள்ள முடியும் என்றார். டிஜிட்டல் கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கு அவசர கல்வி சீர்திருத்தம் தேவை என்றும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் வலியுறுத்தினார்.

## மின்சார நெருக்கடி...

கொள்வனவு செய்வது தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளமையே இதற்கான காரணமாகும்.

கடல் சீற்றம் காரணமாக கப்பல்கள் வருவதில் பிரச்சினைகள் ஏற்படும் என்பதால், ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னதாக 38 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடைய வேண்டும் எனவும் அடுத்த வருடம் அதிக நேர மின்வெட்டுக்கு செல்லாமல் இருக்க அதனை உடனடியாக செய்ய வேண்டும் எனவும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி BLACK SAND எனப்படும் நிறுவனத்திற்கு நிலக்கரி தொடர்பான விலைமனுவை வழங்கும் போது இலங்கை நிலக்கரி நிறுவனம் உரிய நடைமுறையை பின்பற்றாமையினால் குறித்த விலைமனு இரத்து செய்யப்பட்டது.

மாதமொன்றுக்கு 06 கப்பல்கள் வீதம் அடுத்த தவணைக் காலத்திற்கு முன்பாக நிலக்கரிக்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், தற்போது 12 கப்பல்களை நாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதாகவும் நிலக்கரி நிறுவனம் சுட்டிக்காட்டியது.

எனினும், டொலர் மற்றும் ரூபாவிற்கான நெருக்கடி காரணமாக அவற்றில் அரைவாசியை மாத்திரமே கொண்டு வருவதற்கான இயலுமை உள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் கூறியுள்ளது.

இதற்கமைய, தற்போது கையிருப்பில் உள்ள நிலக்கரி தொகையானது எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வரை மாத்திரமே போதுமானதாக உள்ளதாகவும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, 02 மணித்தியாலம் 20 நிமிட மின்வெட்டை மேலும் 02 நாட்களுக்கு அமுல்படுத்த இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியதான இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும், டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை இந்த மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது ட்விட்டர் தளத்தில் நேற்று முன்தினம் பதிவிட்டிருந்தார்.

அத்துடன், தெற்கு வலயம் மற்றும் எல்ல சுற்றுலா வலயங்களிலும் இரவு வேளையில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாதெனவும் அமைச்சரின் பதிவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## வன்னியில் மக்களது...

அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் மேற்கொள்ளும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் பிரதேச அதிகாரிகள் உதாசீனப் போக்கை காட்டுவதாக தெரிவித்த அவர், அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக வன்னி மாவட்டத்தில் மதுரா நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையில் புதிதாக மரக்கன்று நடும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதனால் தற்போது கால்நடை மேய்ச்சலுக்காக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுற்றாடல் அமைச்சு, வன ஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு, சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சு ஆகியவற்றுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், வன்னி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையிலான மோதல் அடிக்கடி இடம்பெறுகின்றன. இதனால் பொதுமக்களின் பயிர்ச்செய்கைகள் அழிவடைந்து வருகின்றன. அதேவேளை நெடுங்கேணி, சன்னாசி, மதுரா நகர் பகுதிகளில் இதுவரை காலம் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளாக காணப்பட்ட இடங்கள் வன பாதுகாப்பு அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனால் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இல்லாமல் போயுள்ளன. அது தொடர்பில் அமைச்சர் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# கிழக்கின் குரல்



## இறைச்சிக்காக வெட்டப்படும் கழிவுகளை உரிய முறையில் அகற்ற வேண்டுகோள்

### அக்கரைப்பற்று பிரதேச சபை

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

பல்வேறு சடங்குகளின் நிமித்தம் வீடுகளில் இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடு போன்ற பிராணிகளின் கழிவுகளும் இறந்த பிராணிகளின் கழிவுகளும் உரிய முறையில் அகற்றப்படாமை தொடர்பில் அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு பல முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக, அப்பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.றாஸிக் தெரிவித்தார்.

இம்முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, அதன் உண்மை தெரிய வந்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பள்ளிக் குடியிருப்பிலிருந்து இசங்கணிச்சீமைக்கு செல்லும் வீதியை அண்டி அமைந்துள்ள தனியார் காணியொன்றில் இறைச்சிக்காக வெட்டப்பட்ட பிராணிகளின் கழிவுகள் மட்டுமல்லாது, இறந்து உருக்குலைந்த பெரியதொரு பசுவையும் அவதானிக்க முடிந்தது.

இதனைத் தொடர்ந்து அக்காணியிலிருந்த இக்கழிவுகளை பிரதேச சபையின் உதவியுடன் உரிய முறையில் தாம் அகற்றியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இவ்வாறு அக்காணியில் வீசப்பட்ட பிராணிகளின் கழிவுகளினால் எழுந்த துர்நாற்றத்தினால், அச்சூற்றாடல் மாசடையும் நிலைமை உருவாகியுள்ளதாகவும், அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, தமது தேவைகளுக்காக ஆடு, மாடுகள் வெட்டப்பட்டால் அதன் கழிவுகளையும் இறந்த பிராணிகளையும் உரிய முறையில் அகற்றுமாறு பொதுமக்களிடம் தாம் கேட்டுக்கொள்வதுடன், இது தொடர்பில் பிரதேச சபையின் உதவியை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.



## திருமலையில் விறகு எடுக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை, லிங்கநகர் அம்மன் கோவிலை அண்டிய காட்டுப் பகுதிக்கு விறகு பொறுக்குவதற்காகச் சென்ற வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விறகு பொறுக்குவதற்காக கடந்த 30ஆம் திகதி வீட்டை விட்டுச் சென்ற அவர், மீண்டும் வீடு திரும்பாததை அடுத்து, அவரைத் தேடிய போது, துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான கடற்கரையில் அவரது சடலம் காணப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

லிங்கநகர் முருகன் கோவில் 25 ஆவது ஒழுங்கையில் வசிக்கும் 3 பிள்ளைகளின் தந்தையான நாகரட்ணம் நடேசபிள்ளை (79) என்பவரது சடலமே நேற்று முன்தினம் (01) மீட்கப்பட்டது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பில் இவ்வருடத்தில் 6 பேர் டெங்கு நோயினால் பலி

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் பருவ மழை காரணமாக அதிக இடங்களில் நீர் தேங்கிக் காணப்படுவதால், டெங்கு நுளம்புகளின் பெருக்கம் மற்றும் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கலாமென, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

ஒவ்வொரு வருடத்தின் இறுதி மாதமான டிசெம்பரில் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாகவும், அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வருடத்தில் இதுவரையில் மட்டக்களப்பில் 6 டெங்கு நோயாளர்கள் உயிரிழந்துள்ளதுடன், 1,000 க்கும் மேற்பட்டோர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

எனவே, டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக சுற்றுச்சூழலை துப்புரவாக வைத்திருக்க வேண்டுமெனவும், பொதுமக்களிடம் அவர் கோரினார்.

காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் உடனடியாக மருத்துவரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

## காட்டு யானைகளின் தாக்குதலில் வீடு சேதம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



போரதீவுப்பற்றின் திக்கோடைக் கிராமத்தில் நுழைந்த 3 காட்டு யானைகள், வீடொன்றை சேதமாக்கி விட்டுச் சென்றுள்ளது.

மேற்படி வீட்டை கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் காட்டு யானைகள் சேதமாக்கியிருந்ததை தொடர்ந்து, அவ்வீட்டை வெளிநாட்டிலுள்ள சில தனவந்தர்கள் புனரமைத்துக் கொடுத்தனர். இந்நிலையில், கடந்த 29ஆம் திகதி அதே வீட்டை மீண்டும் காட்டு யானைகள் சேதமாக்கியுள்ளது. தனது வீட்டை புனரமைப்பதற்கு எவராவது உதவுமாறும், தமது கிராமத்தில் யானை பாதுகாப்பு வேலி அமைத்து தருமாறும் அவ்வீட்டு உரிமையாளர் கோரியுள்ளார்.



திருகோணமலை, காந்திநகர் அருள்மிகு ஸ்ரீ அரசடி ஆதி வைரவர் ஆலயத்தின் காவல் தெய்வமான முனியப்பர் சுவாமிக்கு ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அண்மையில் இதற்கான நிகழ்வு நடைபெற்றதுடன், இதில் ஆலய நிர்வாகிகள், பக்தர்கள் கலந்து கொண்டனர். (படம்: அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

## அட்டாளைச்சேனையில் ஆக்கத்திறன் கண்காட்சி

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**



அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பநெறி ஆசிரிய பயிலுனர்களின் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் கண்காட்சி, அக்கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் (01) நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு விரிவுரையாளர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கல்லூரியின் பீடாதிபதி, சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி கலந்துகொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது, ஆசிரியர் பயிலுநர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு கற்றல், கற்பித்தல் துறைசார் செயற்பாட்டுப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மாணவர்களின் இலகு கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் கற்றல் நுட்பங்கள் அடங்கிய சாதனங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

## சிறுகதை ஆக்கத்தில் வெற்றி பெற்ற மாணவன்



**மணல்சேனை நிருபர்**

வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மதிவண்ணன் சியானுதன் எனும் மாணவன், தேசிய இலக்கியப் போட்டியில் சிறுகதை ஆக்கத்தில் தேசிய ரீதியில் மூன்றாமிடத்தை பெற்றுள்ளார்.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து தேசிய இலக்கியப் போட்டியை அண்மையில் நடத்தியது. இதில் சிறுகதை ஆக்கத்தை முன்வைத்து சிரேஷ்ட பிரிவில் இம்மாணவன் வெற்றி பெற்றுள்ளார்.

## திருமலையில் வாசிப்பு மாத நிகழ்வு; 174 மாணவர்களுக்கு சான்றிதழ்கள்

**தம்பலகாமம் குரூப் நிருபர்**



திருகோணமலையின் பட்டினமும் சூழலும் பிரதேச சபையில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த 30ஆம் திகதி நடத்தப்பட்ட இந்நிகழ்வின் போது, போட்டிகளில் சுமார் 500 மாணவர்கள் கலந்து கொண்டதுடன், அப்போட்டிகளில் முதல் 3 இடங்களை தட்டிச்சென்ற 174 மாணவர்களே சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நவீன தொழில்நுட்ப சாதனங்களை மாணவர்கள் கையாளும் போது, அதன் சாதக, பாதகங்களை தெளிவுபடுத்தி மாணவர்கள் அதனைக் கையாளும் முறைமை தொடர்பில் அவதானத்தை செலுத்தல் காலத்தின் தேவையாக அமைவதாக, கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ. ஜி.திசாநாயக்க தெரிவித்தார்.

## கல்லடியில் நூல் வெளியீடு

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



முப்பது வருட யுத்தம் முடிந்த நிலையில், முரண்பாட்டு பன்முக நிலைமாற்றத்துக்கூடாக இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கான ஆக்கங்கள் நிறைந்த 'பாதை கூறும் வெள்ளித் தாரகைகள்' நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில், கல்லடி கிறீன் காடன் விடுதியில் கடந்த 30ஆம் திகதி இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

இந்நூலில் சின்ன அரேபியாவின் புத்தர் மனை, மா உருண்டை கருத்தடை மாத்திரையாகிச் செய்த கொடுமை, காட்டு யானைகளின் தொல்லைகளும் சமய கோஷங்களும், நல்லிணக்கத்துக்கு முன்மாதிரியாக கிராமத்துக்கு அழைத்து வந்த என்னுடைய தமிழ் அண்ணி, நல்லிணக்கத்துக்கு எடுத்துக் காட்டாகிய சாதிக்கின் மாமா உள்ளிட்ட 107 கட்டுரைகள் தமிழ், சிங்கள மொழிகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

இந்நூலில் இலங்கையில் வாழும் மூவினச் சமூகங்களை பரஸ்பர உறவாகப் பார்க்கும் கண்ணோட்டத்தை இல்லாமல் செய்து, ஒருவருக்கொருவரை விரோதியாகப் பார்க்கும் நிலை மாறியுள்ளதாக பத்தி எழுத்துகள் சுட்டிக்காட்டுகின்றன.

## சமாதானத்தை வலியுறுத்திய மாநாடும் நடைபவனியும்

**பெரியபோரதீவு தினகரன், மட்டக்களப்பு விசேட, மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் சமாதானத்தை வலியுறுத்திய மாநாடொன்று, கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற இம்மாநாட்டில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த மூவின மதத் தலைவர்களும் இளைஞர், யுவதிகளுமாக சுமார் 100 பேர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இதன்போது இன, மத சகவாழ்வு, பொருளாதார வளர்ச்சி தொடர்பில் கருத்துகள் பரிமாறப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, சமாதானத்தை வலியுறுத்திய நடைபவனியும் நடைபெற்றது.



## மருதமுனையில் நூல் வெளியீடு

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

மருதமுனையை சேர்ந்த விரிவுரையாளர் ஏ.ஜெ.எல்.வஸீல் தொகுத்து எழுதிய 'மருதமுனை வரலாற்றில் மூத்த கல்வியலாளர், ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.ஏ.எஸ் இஸ்மாயில் மௌலானா ஜே.பி அவர்களின் கல்வி, சமய, சமூகப் பங்களிப்பு' எனும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வு மருதமுனையில் இன்று (03) பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மருதமுனை இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது

## ஊரணியில் வீடு உடைத்து திருட்டு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு, ஊரணி பிரதேசத்தில் பூட்டியிருந்த வீடொன்றில் சுமார் 13 பவுண் தங்க நகைகளும் 90 ஆயிரம் ரூபா பணமும் திருட்டுப் போயுள்ளதாக, பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 29ஆம் திகதி தமது வீட்டை பூட்டி விட்டு உறவினரின் வீட்டுக்கு பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் சென்றுள்ளனர். இந்நிலையில், கடந்த 30ஆம் திகதி தமது வீட்டுக்கு அவர்கள் திரும்பி வந்த போது, வீட்டுக் கதவு உடைக்கப்பட்டிருந்தது.

தாலிக்கொடி உள்ளிட்ட தங்க நகைகளும் பணமும் திருட்டுப் போனமை தெரிய வந்ததைத் தொடர்ந்து, பொலிஸில் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## நிந்தவூரில் அப்துல் ஹமீட் பங்குபற்றும் மாநாடு

**அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்**

உலகப் பிரபல்யமிக்க அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீட் கலந்து கொள்ளும் மாபெரும் இளைஞர் மாநாடொன்று, நிந்தவூரில் இன்று (03) நடைபெறவுள்ளது.

அல்அஷ்ரக் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் நடைபெறவுள்ள இவ்விளைஞர் மாநாடு, 'புதிய தலைமுறையினருக்கான சரியான பாதை' எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீட் கலந்து கொண்டு வழிகாட்டல் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார்.

இம்மாநாட்டில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிந்தவூர் அல்அஷ்ரக் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

## 2021இல் மட்டு. மேற்கு கல்வி வலயத்தில் 354 பாடசாலை மாணவர்கள் இடைவிலகல்

**கொக்கட்டிச்சோலை நிருபர்**

கடந்த 2021ம் ஆண்டில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் 354 மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடை விலகியுள்ளதாக, வலய மாணவர் இடைவிலகல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு மொத்த மாணவர் தொகையில் 2.65 சதவீதமான மாணவர்கள், அவ்வருடத்தில் இடை விலகியுள்ளதாகவும், அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதில் தரம் 10 இல் கல்வி கற்கும் போதே அதிகமான மாணவர்கள் இடை விலகியுள்ளமையை தெரிய வந்துள்ளது. 2021ஆம் ஆண்டில் தரம் 10 இல் 106 மாணவர்கள் இடை விலகியுள்ளனர். அவர்களுள் ஆண் மாணவர்களே அதிகமாக இடை விலகியுள்ளனர்.

அந்தாண்டு அறிக்கையின் அடிப்படையில் 236ஆண் மாணவர்களும் 118 பெண் மாணவர்களும் இடை விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2021ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 2,585 மாணவர்கள் பாடசாலையை விட்டு இடை விலகியமை துர்ப்பாக்கியமானதாக கருதப்படுவதாகவும், அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூதூரில் புதிய கலாசார மண்டபம் நிர்மாணம்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூரில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கலாசார மண்டபம் அமைக்கப்பட்டு வருவதாக, மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ் தெரிவித்தார்.

மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சின் உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத் திட்டத்தின் கீழ் 2 கோடியே 30 இலட்சம் ரூபா நிதியில் இம்மண்டபம் அமைக்கப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

மூதூரில் பொதுவான கலாசார மண்டபம் இல்லாமையால், தற்போது அமைக்கப்படும் இக்கலாசார மண்டபத்தில் பொதுமக்கள் தங்களுக்கான சேவைகளை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

## கிழக்கின் குரல்

# கிண்ணியாவில் வடசல் பாலத்தை நிர்மாணிக்க பொதுமக்கள் வேண்டுகோள்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் பூவரசம் தீவையும் கல்லடி வெட்டுவானையும் இணைக்கும் வடசல் பாலத்துக்கான நிர்மாணப் பணியை தொடர்ந்து முன்னெடுக்குமாறு, பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பாலத்தின் நிர்மாணப் பணி, திருகோணாமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கினால் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இருந்த போதிலும், தற்போது இப்பாலத்தின் நிர்மாணப் பணி இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளது.

இப்பாலத்தை நிர்மாணித்துத் தரப்படும் பட்சத்தில் மீனவர்கள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இலகுவாக தமது போக்குவரத்தை மேற்கொள்ள முடியுமெனவும், ஆகையால், இப்பாலத்தை உடனடியாக நிர்மாணித்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# காரைதீவில் டெங்கு சோதனை; 16 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

**காரைதீவு குறூப் நிருபர், திராய்க்கேணி தினகரன் நிருபர்**



காரைதீவிலும் மாளிகைக்காட்டிலும் டெங்குப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது, டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் இடங்களை வைத்திருந்த 16 பேருக்கு சிவப்பு அறிவித்தல் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 29ஆம் திகதி 469 வீடுகளில் டெங்குச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, அட்டாளைச்சேனையில் கடந்த நவம்பரில் 49 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை பிரதேச வைத்திய அதிகாரி ஏ.எம். இஸ்மாயில் தலைமையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், அப்பிரதேசத்தில் டெங்கொழிப்பு பணி மேற்கொள்ளப்படவுள்ளதாக, அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிவானந்தாவில் மருத்துவ முகாம்

**மட்டக்களப்பு குருப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், மருத்துவ முகாமொன்று சிவானந்தா தேசிய பாடசாலையில் நேற்று முன்தினம் (01) நடைபெற்றது.

இதில் மருத்துவ தேவையுடைய ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

இவ்வாறான மருத்துவ முகாம் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை நடத்தப்படவுள்ளதாக, சிவானந்த தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

# இலவச மருத்துவ முகாம்

**மட்டக்களப்பு விசேட நிருபர்**

மட்டக்களப்பு நூற்றாண்டு நட்சத்திரங்கள் லயன்ஸ் கழகம் நடத்திய இலவச மருத்துவ முகாமொன்று, ஊறணி சுகமளிக்கும் மருத்துவ நிலையத்தில் நேற்று (02) நடைபெற்றது.

நூற்றாண்டு நட்சத்திரங்கள் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வேல்முருகு குகன் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில், 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு எலும்பு ஆரோக்கிய சோதனை மற்றும் கை, கால் விறைப்பு உள்ளவர்களுக்கு நரம்பு ஆரோக்கிய சோதனை என்பன மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் நீரிழிவு மற்றும் வாதநோய் வைத்திய நிபுணர், வைத்தியர் முத்து முருகமூர்த்தி வழிகாட்டலில், வைத்திய அதிகாரிகள் வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டு மருந்துகளை வழங்கினர்.

# கல்முனை வலய கல்வி காரியாலயம் இடமாற்றம்



**காரைதீவு குருப் நிருபர்**

இதுவரை காலமும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் பாடசாலையில் இயங்கி வந்த கல்முனை வலயக் கல்விக் காரியாலயம், புதிய கட்டடத்துக்கு அண்மையில் இடமாற்றப்பட்டுள்ளது.

கல்முனை வலயக் கல்விக் காரியாலயமானது, சுனாமிக்கு பின்னரான காலப்பகுதியில் தற்காலிகமாக மேற்படி பாடசாலையில் கடந்த 16 வருடங்களாக இயங்கி வந்தது.

இந்நிலையில், இதனை நிரந்தரமாக புதிய வசதிகள் நிறைந்த கட்டடத்துக்கு மாற்ற வேண்டுமென்பதில் கல்முனைக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.சஹதுல் நஜீம் துரித நடவடிக்கை எடுத்தார். இதனையடுத்து, கல்முனை வலயக் கல்விக் காரியாலயம் புதிய கட்டடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

கல்முனை வாடிவீட்டு வீதியில் உவெஸ்லி கல்லூரியின் தென்புற வாயிலை தாண்டியவுடன் வலது பக்க வீதியிலே இந்தக் காரியாலயம் அமைந்துள்ளது.



மட்டக்களப்பு தேசிய கல்வி கல்லூரியின் 23ஆம் அணி ஆசிரிய பயிலுனர்களின் இறுதி நாள் பிரியாவிடை நிகழ்ச்சியும் நாடகமும் அரங்கியலும் பாடநெறி மாணவர்களின் நூல் வெளியீட்டு விழாவும் கல்லூரியில் நேற்று முன்தினம் (01) நடைபெற்றது. மாணவர்களின் செயற்றிட்டமாக கல்வி உளவியல் சார்ந்த ஆக்கங்களை உள்ளடக்கிய 'கல்வி உளவியல் பிரயோகம்' எனும் நூல் வெளியிடப்பட்டது.

(படம்: கொக்கட்டிச்சோலை நிருபர்)

# அம்பாறையின் வர்த்தக நிலையங்களில் விசேட சோதனை நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு

**ஒலுவில் விசேட நிருபர்**

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் விசேட சோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும், சில வர்த்தக நிலையங்களில் கூடுதலான விலைக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்தல், வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல் உள்ளிட்டவை குற்றமெனவும், அவர் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

# மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

**காரைதீவு குறூப் நிருபர்**

கல்முனை வலயத்துக்குட்பட்ட அட்டப்பளம் விநாயகர் வித்தியாலயத்தில் பாடசாலை உபகரணங்கள் கையளிப்பு விழாவும் பாராட்டு விழாவும் அதிபர் ச.ரகுநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிந்தவூர் பிரதேச சபையின் உப தவிசாளர் வை.எல்.சுலைமாலெவ்வை எடுத்த முயற்சி காரணமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் அட்டப்பளம் விநாயகர் வித்தியாலயத்துக்கு வழங்கப்பட்டன .

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலய கல்வி பணிப்பாளர் எம் எஸ் எஸ் நஜீம் கலந்து சிறப்பித்தார்.

# மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கு பண உதவி வழங்கிவைப்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தேசிய ரீதியில் தெரிவான மாணவர்களுக்கு பணம் வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பாடசாலைகளுக்கிடையான மெய்வல்லுனர் போட்டியில் மாகாண ரீதியில் வெற்றி பெற்று பாடசாலை ரீதியாக அகில இலங்கை போட்டிக்காக செல்லும் மாணவர்களுக்கு இவ்வாறு பண உதவி வழங்கி வைக்கப்பட்டது.

இதற்கான நிகழ்வு நேற்று முன்தினம் (01) கந்தளாயில் ஜெலி போயிஸ் விளையாட்டுக் கழகத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

கந்தளாய் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளான அல் தாரிக் தேசிய பாடசாலையில் 7 வீரர்கள், ஒரு வீரர், பேராத்துவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஒரு வீரர் ஆகியோருக்கு இவ்வாறு பண உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

# கல்முனையில் கலாசார விழா



**பெரியநீலாவணை விசேட நிருபர்**

கல்முனை கலாசார மத்திய நிலையம் ஏற்பாடு செய்த கலாசார விழாவும் பரிசளிப்பு விழாவும் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர் ஐ.எல்.றிஸ்வான் தலைமையில் நேற்று முன்தினம் (01) நடைபெற்றது.

கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கலைஞர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன், கலாசார மத்திய நிலையத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்கள் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் பிரதேச இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், பிரதேச நலன் விரும்பிகள் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பேராசிரியராக பதவி உயர்வு

**மணல்சேனை நிருபர்**



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் துறையில் பேராசிரியராக துறைநீலாவணையைச் சேர்ந்த கலாநிதி செ.அரசரெத்தினம் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவரை பேராசிரியராக பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழக பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது இரசாயனவியல் துறை சிறப்புப் பட்டதாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேனீ வளர்ப்பு கிராமங்களை உருவாக்கும் வேலைத்திட்டம்



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்துக்கு 1,000 தேனீப் பெட்டிகளை வழங்கும் வேலைத்திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் கோமரன்கடவல பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தின் யோசனைக்கமைய, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் சிறுபயிர் ஏற்றுமதி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில், இத்தேனீ பெட்டிகள் வழங்கப்பட்டன.

இதன்போது, தேனீ வளர்ப்புத் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் பணியை கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டனர்.

இவ்வேலைத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தேனீ பெட்டிகள் வழங்கப்படவுள்ளன.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துதல், தேனீ வளர்ப்பு கிராமங்களை உருவாக்குதல், உள்ளூர் தேன் உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கமென்பது குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடி பாடசாலை மாணவி புத்தாக்கப் போட்டியில் வெற்றி

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



தேசிய ரீதியிலான மாணவர்களுக்கான புத்தாக்கப் போட்டியில் காத்தான்குடி அல் அமீன் வித்தியாலய தேசிய பாடசாலை மாணவி எம்.எப். இஸ்ஸத் சபா தேசிய ரீதியில் இரண்டாமிடத்தை பெற்றுள்ளார்.

கொழும்பு பண்டார நாயக்க மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் தேசிய ரீதியில் இப்போட்டி நடைபெற்றது.

பொழுதுபோக்கு சாதாரணக் கருவியை செய்தமைக்காக இம்மாணவி வலய மட்டம், மாகாண மட்டத்தில் இப்போட்டியில் கலந்து கொண்டு முதலாம் இடத்தைப் பெற்ற நிலையில் தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொண்டு தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை நிலை நாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மத்தி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள அல் அமீன் வித்தியாலய தேசிய பாடசாலையில் தரம் 10இல் இம்மாணவி கல்வி கற்கின்றார்.

இப் போட்டியில் பங்குபற்ற தனக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கிய பாடசாலை அதிபர் நயீமா சலாம், ஆசிரியர் ரயீஸ்கான் மற்றும் ஆசிரியர்களுக்கும் தனது பெற்றோருக்கும் இம்மாணவி நன்றி தெரிவித்துள்ளார்.

# புதிய பீடாதிபதி கடமை பொறுபேற்பு

**கொக்கட்டிச்சோலை நிருபர்**

கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை, கலாசாரப் பீட புதிய பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட கலாநிதி வ.குணபாலசிங்கம் தனது கடமையை நேற்று (02 )பொறுப் பேற்றுக்கொண்டார்.

கிழக்கு பல்கலைக்கழக இந்துநாகரீகத் துறையின் முதுநிலை விரிவுரையாளரும் இந்துநாகரீகத் துறையின் தலைவராகவும் இவர் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர், பேராசிரியர் ஜீ.கென்னடி கலை, கலாசார பீடாதிபதியாக கடமையாற்றியிருந்தார்.

# மட்டக்களப்பு மாவட்ட வருட இறுதி கணக்காய்வு முகாமைத்துவ கூட்டம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்துக்கான வருட இறுதிக் கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டம், மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (01) நடைபெற்றது.

இதன்போது, கணக்காய்வுகள் மேற்கொள்ளும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், துறைசார் அதிகாரிகளினால் அவற்றுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன. இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் கணவன், மனைவி கொடூரக் கொலை

## குற்றவாளிக்கு இரட்டை மரண தண்டனை

### 10 ஆண்டுகளின் பின்னர் நீதிபதி இளஞ்செழியனின் அதிரடி தீர்ப்பு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் கடந்த 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம்19 ஆம் திகதி கணவன் மனைவி இருவரையும் வெட்டி கொடூரமாக கொலை செய்த வழக்கில் வவுனியா மகாறம்பைக் குளத்தைச் சேர்ந்த குற்றவாளிக்கு இரண்டை மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொல்லப்பட்டவர்களின் நகைகளைக் கொள்ளையடித்தமைக்காக 20 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

முதலாவது குற்றவாளியின் சகோதரரான இரண்டாவது சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இந்தத் தீர்ப்பு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு முதலாவது நபரிடமிருந்து, கொலை செய்யப்பட்டவர்களின் தங்க ஆபரணங்கள் மற்றும் தொலைபேசிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

முதலாவது நபர் கொலையுண்டவர்களின் வீட்டில் வேலை செய்து வந்தவரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்துபோன கணவருடன் இறுதியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட ஒரு இடத்துக்கு வருமாறு முதலாவது நபர் அழைத்ததையடுத்து, அங்கு சென்றபோதே அவர் கொலை செய்யப்பட்டுள்ளார். அதன் பின்னர் வீட்டில் வைத்து அவரது மனைவி கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர்களின் கைவிரல்கள் துண்டிக்கப்பட்டு நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. துண்டாடப்பட்ட விரல்கள் சடலங்களின் அருகில் கண்டுபிடிக்கப்பட்டன. கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட கோடரி கிணற்றிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. சடலத்தின் அருகிலிருந்து கத்தியொன்றும் எடுக்கப்பட்டது.



கொலையுண்ட கணவனுடன் முதலாவது நபர் இறுதியாகத் தொலைபேசியில் பேசியது தொடர்பில் வவுனியா நீதவான் நீதிமன்ற நீதிபதியிடம் விசேட கட்டளையின் பேரில் தொலைபேசி நிறுவன அறிக்கை பெறப்பட்டு அதன் மூலம் அந்த அழைப்பை ஓமந்தை தொலைதொடர்பு கோபுரப் பிரதேசத்தில் முதலாம் எதிரியே ஏற்படுத்தினாரென்பதும் பொலிஸ் புலன் விசாரணையில் கண்டறியப்பட்டது. இதனூடாக இந்த இரட்டைக் கொலைகள் தொடர்பான தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்ததாக ஓமந்தை பொலிஸ் நிலையப் புலனாய்வு பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

இறந்தவர்களின் மகள், முதலாவது நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்க ஆபரணங்கள் தனது தாய், தந்தையரின் நகைகளென பொலிஸ் நிலையத்தில் அடையாளம் காட்டி சாட்சியமளித்ததாகவும், வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட அந்த நகைகள் பின்னர் நீதிமன்ற களஞ்சியப் பொறுப்பாளரினால் களவாடப்பட்டு அவர் தற்சமயம் தலைமறைவாகி இருப்பதாகவும் வவுனியா நீதிமன்றப் பதிவாளர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.

இறந்தவர்களின் உடல்களில் கொடூரமான வெட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும், இரு சடலங்களிலும் விரல்கள் துண்டிக்கப்பட்டிருந்ததாகவும், மொட்டையான ஆயுதத்தினால் தலையில் தாக்கப்பட்டு இருவரும் மரணமடைந்ததாகவும் மருத்துவப் பரிசோதனை செய்த வைத்திய நிபுணர் வைத்தியரத்ன அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இவ்விடயங்கள் அனைத்தையும் ஆராய்ந்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இரட்டைக் கொலை மற்றும் நகைகளைக் கொள்ளையடித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்கு முதலாம் எதிரியே குற்றவாளியென அறிவித்தார்.

அத்துடன் இரண்டு கொலைகளுக்கும் முதலாம் எதிரிக்கு இரட்டை மரண தண்டனையும் கொல்லப்பட்டவர்களுக்குக் காயங்களை ஏற்படுத்தி நகைகளைக்கொள்ளையடித்த குற்றச்சாட்டுக்கு தலா 20 ஆண்டுகள் வீதம் 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். ஜனாதிபதி தெரிவிக்கும் நேரம், தெரிவிக்கும் இடத்தில் குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றுமாறும் நீதிபதி ஆணை பிறப்பித்துள்ளார்.

இவ்வழக்கில் குற்றவாளிக்குத் தண்டனை விதித்தபோது நீதிமன்றத்தில் அனைத்து மின் விளக்குகளும் அணைக்கப்பட்டு மரண தண்டனைத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

## முதியவரை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

**சாவகச்சேரி விஷேட நிருபர்**



சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலையத்தில் அநாதரவாக இருந்த முதியவர் ஒருவரை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். முதியவர் சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலையத்தில் சில தினங்களாக இருந்துள்ளார். இதனையடுத்து பொதுமக்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். முதியவர் வாய் பேச முடியாதவர் என தெரியவந்துள்ளது.

## போதைப்பொருள் பாவனையால் எயிட்ஸ் நோய் தொற்றும் அபாயம்

**(தலைமன்னார் விஷேட நிருபர்)**

போதைப்பொருள் பாவனை காரணமாகவே எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவருவதாக விஷேட வைத்திய நிபுணர் தக்ஷாயினி மகேந்திரநாதன் தெரிவித்தார்.

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தர்மராஜா வினோதனின் தலைமையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், வடமாகாணத்தில் 137 பேர் எய்ட்ஸ் நோயாளர்களாக இனம்காணப்பட்டுள்ளனர். இதில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 11 பேரும் அடங்குவர். மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை காரணமாக எயிட்ஸ் தொற்றுநோய் தீவிரமாக பரவும் அபாயம் காணப்படுகின்றது. அத்துடன் எச்.ஐ.வி நோயாளர்களுக்கான சிகிச்சை, அவர்களுக்கான இரத்தப்பரிசோதனை ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே, நாங்கள் மன்னார் பிராந்திய போக்குவரத்து நிலையத்தில் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒதியமலைப் படுகொலையின் 38ஆவது நினைவு தினம்



முல்லைத்தீவு ஒதியமலைப்பகுதியில் 1984ஆம் ஆண்டு இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்டவர்களின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஒதியமலை சனசமூக நிலைய வளாகத்திலுள்ள நினைவிடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நினைவுச்சுடர்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அதனைத்தொடர்ந்து உறவினர்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபிகளுக்கு மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலிகளில் ஈடுபட்டனர். அஞ்சலிக் கூட்டமொன்றும் இதன்போது இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், கனகையா தவராசா, புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் ஜோன்சன் ஆகியோருடன் படுகொலை செய்யப்பட்டவர்களுடைய உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். மேலும் படுகொலைசெய்யப்பட்டவர்களின் நினைவாக உறவினர்களுக்கு முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முதியவர் சடலமாக மீட்பு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் மத்தி பகுதியைச் சேர்ந்த முதியவரொருவர் நேற்றுமுன்தினம் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் நண்பகல் வேளையில் இவர் வீட்டுக்கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் மத்தியைச் சேர்ந்த 67 வயதான சிவலிங்கம் சிவானந்தம் என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 'ரிக் ரொக்' எடுக்க முயற்சித்த போது கடலில் வீழ்ந்த இளைஞன் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்

யாழ்.பருத்தித்துறை துறைமுகத்தில் நண்பருடன் மோட்டார் சைக்கிளில் ரிக் ரொக் காணொளி எடுக்க முயற்சித்த இளைஞர் ஒருவர் கடலில் வீழ்ந்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்முன்தினம் (01) மாலை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறையை சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கடலில் வீழ்ந்துள்ளார்.

இரண்டு நண்பர்கள் இணைந்து மோட்டார் சைக்கிளில் 'ரிக் ரொக்' எடுக்க முயற்சித்த போது மோட்டார் வண்டியுடன் ஒருவர் கடலுக்குள்ளும் மற்றையவர் வெளியிலும் வீழ்ந்துள்ளனர்.

அதனையடுத்து அவ்விடத்தில் கூடிய இளைஞர்களும், பாதுகாப்பு தரப்பினரும் கடலில் வீழ்ந்த இளைஞரை உயிருடன் மீட்டெடுத்ததுடன், மோட்டார் சைக்கிளையும் மீட்டு கரைசேர்த்தனர்.




யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் 'வசந்தம் பாமசி' என்ற பெயரில் மருந்தகமொன்று திறந்து வைக்கப்பட்டது யாழ்.மாவட்ட கட்டளை தளபதி மற்றும் மேஜர் ஜெனரல் பிரியந்த விஜயசூரிய, கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மகேந்திர பெர்ணான்டோ மற்றும் 511 பிரிக்கேடியர் ஆகியோர் விசேட அதிரடிப்படை பணிப்பாளர் சமூக சேவையாளர் கந்தசாமி கருணாகரன், வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் பவானந்தன், பாமசி உரிமையாளர் லிங்கநாதன் அகிலன் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

## சுத்தானந்த இந்து இளைஞர் சங்க 70 ஆவது ஆண்டு நிறைவு விழா

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

சங்க தலைவர் வைத்தியர் ப.சத்தியநாதன், தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசாமி கோவிலிலிருந்து நாயன்மார்கள் மற்றும் இந்து மதத்திற்கு அரும்பங்காற்றியவர்களை சித்திரிக்கும் வகையிலான வேடங்கள் அணிந்த மாணவர்களுடன் ஊர்வலம் ஆரம்பித்து வவுனியா சுந்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினை சென்றடையும். இதனையடுத்து சங்க மண்டபத்தில் கலை நிகழ்வுகளும் உரைகளும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

## க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் சிறந்த பெறுபேறு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் 22 பேர் 9ஏ சித்தியையும், 16 மாணவர்கள் 8 ஏ,பி பெறுபேறுகளையும் பெற்றிருப்பதாக பாடசாலை அதிபர் ந.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சி.கிருஷன், த.அருணன்,பி. அபிராம், ரா.டர்சனா, மு.ரக்சனா, க.டோஜிகா, சி.மோகனவாணி, சி.சாருகா, சு.ஆர்த்திகா, கோ.திலக்சிதா, உ.நர்த்தகி,கு.பானுஷா, பி.சிபானி, ஜெ.சாருமதி, தி.கர்சனா, அ.நர்த்தகி, பு.கம்சாயினி, தே.சஜீபனா, க.வர்சிதா, உ.கேனுஜா, ப.சர்மிகா, க.டிலக்சிகா ஆகியோர் 9 ஏ பெறுப்பேறுகளையும், ஞா.சதுர்சன், இ.சரணிகன், ஜெ.அபிசன், சி.நிலக்சன், சி.பரணிதன், ஶ்ரீ.அருள்வாரணன், நி.மிதுசகன்,கி.சாகித்தியன், கோ.லக்சிகன், ரா.தமிழன்பன், தி.கர்சனா, ம.அஜனிகா, ஶ்ரீ. வைஷ்ணவி, நி.அபிஷனா, ந.கவினயா, க.கிருஷிகா ஆகியோர் 8 ஏ.பி பெறுபேறுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர் வேலை பகிஷ்கரிப்பு:

# கோணமுட்டாவ தோட்ட நிர்வாகத்துடன் செந்தில் தொண்டமான் பேச்சுவார்த்தை

## எட்டப்பட்ட இணக்கப்பாட்டையடுத்து தேயிலையை வெளியேற்ற அனுமதி



கோணமுட்டாவ தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் குறித்த தோட்ட நிர்வாகத்துடன் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கோணமுட்டாவ தேயிலை தொழிற்சாலையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில்,

தொழிலாளர்களுக்கு தற்போது வரை வழங்கப்பட்ட அரை சம்பளத்தை முழு சம்பளமாக வழங்க நிர்வாகம் ஒப்புதல் வழங்கியது. அத்துடன் நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாயமாக 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என்ற நிபந்தனை தேயிலை மலைகளுக்கு ஏற்ற வகையிலே நிர்ணயிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டு 20 கிலோவாக இருந்த அடிப்படை தொகை 16 கிலோவாக குறைக்கப்பட்டது. ஒவ்வொரு நிறுவைக்கும் வலுக்கட்டாயமாக 3 கிலோ தேயிலை குறைப்பு நாளை முதல் 1 கிலோவாக மாற்றி அமைக்கப்பட்டது. ஞாயிறு மற்றும் போயா நாட்களுக்கு வழங்கப்படாதிருந்த ஒன்றரை நாட் சம்பளம் தற்போது வழங்குவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும், ஓய்வூதியத் தொழிலாளர்களுக்கு கைகாசு அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த ஊதியம் இனிவரும் காலங்களில் முழு சம்பளமாக வழங்கப்படும் என ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் மேலும் பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

தோட்ட நிர்வாகத்தால் வழங்கபட்ட ஒப்புதலை ஏற்று, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத்தில் இருந்து தேயிலை தூளை ஏற்றுமதிக்கு வெளியேற்ற அனுமதி வழங்கியது.

## மலைச்சாரல்



ஹப்புத்தளை – தியத்தலாவை வீதியில் 'வை' சந்தியிலிருந்து தியத்தலாவை நகரத்திற் கிடைப்பட்ட பைனஸ் வனப் பகுதியில் குப்பைகள் கொட்டப்படுவதால் சூழல் மாசடைந்து பிரதேசமெங்கும் துர்நாற்றம் வீசுகின்றது. தியத்தலாவை விமானப்படை முகாமைச் சேர்ந்த விமானப் படையினர் வீதியின் இரு மருங்கிலும் கொட்டப்பட்ட குப்பை கூளங்களை அகற்றி அப்புறப்படுத்துகின்றனர். (படம்: ஊவா சுழற்சி நிருபர்)

# நில்தண்டாஹின்னா நகரில் மதுபானசாலைக்கு அனுமதி

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா வலப்பனை, நில்தண்டாஹின்னா நகரில் மற்றுமொரு மதுபானசாலையை திறப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என வலியுறுத்தி நில்தண்டாஹின்னா நகரில் நேற்று முன்தினம் (01) பொது மக்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நில்தண்டாஹின்னா நகர வாசிகளும், அதனை சூழவுள்ள கிராமங்களில் வாழும் மக்களும் இணைந்தே இப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நில்தண்டாஹின்னா நகரில் ஏற்கனவே மதுபானசாலையொன்று உள்ள நிலையில், மற்றுமொரு மதுபானசாலையை திறப்பதற்கு அனுமதி பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் இப்பகுதியில் சமூக நெருக்கடி பிரச்சினைகள் உருவாகலாம் எனவும், இளைய சமுதாயம் சீரழிக்கப்படலாம் எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர். குறித்த நகரத்துக்கு பல அத்தியாவசிய தேவைகள் இருக்கும்போது எதற்காக மற்றுமொரு மதுபானசாலை திறப்பதற்கு உடனடியாக அனுமதி வழங்கப்பட வேண்டும் என கேள்வி எழுப்பும் மக்கள், அந்த அனுமதி பத்திரம் இரத்து செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர். இப்போராட்டத்தால் நில்தண்டாஹின்னா நகரின் இயல்பு நிலை ஸ்தம்பிதமடைந்தது. போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

# சமய கல்வி நிறுவனங்களின் சகவாழ்வுக்கான இளைஞர் பங்கேற்பு

சமய கல்வி நிறுவனங்களின் சகவாழ்வுக்கான இளைஞர் பங்கேற்பு திட்டத்தின் கீழ் பல்வேறு செயற்பாடுகள் இளைஞர், யுவதிகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் படி சமயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் இளவயதினரிடையே சகவாழ்வு மற்றும் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் தொடர் செயலமர்வுகளை 'சைல்ட் கெயார் பார்த் லங்கா' அமைப்பு நடத்தி வருகிறது. அறநெறிப்பாடசலைகள், மத்ரஷா கல்வி நிறுவனங்கள், கிருஸ்தவ ஞாயிறு பாடசலைகள், பௌத்த தஹாம் பாடசாலைகள் போன்றவற்றின் மாணவ, மாணவிகள் இதில் பங்குகொள்கின்றனர்.

அது தவிர இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஆக்கங்களை உருவாக்கி சஞ்சிகைகளாகவும் வெளியிட்டு வருகிறது. மேற்படி



செயற்பாட்டின் இரண்டாம் இதழ் அண்மையில்(27) வத்துகாமம் கல்வி வலயத்திலுள்ள இரஜவல இந்து தேசிய பாடசாலை மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

'பாலம்' என்ற மேற்படி சஞ்சிகையின் முதற் பிரதியை 'சையில்ட் கெயார் பார்த் லங்கா' நிறுவனத்தின் பணிப்பாளர் காமினி ரத்னதிஸ்ஸவினால் மேற்படி பாட அறநெறிமாணவியான எம்.தர்சிகாவிற்கு வழங்கப்பட்டது.

# பல்லேப்பொல பிரதேச சபையில் வரவுசெலவு திட்டம் நிறைவேற்றம்

தம்புள்ள தினகரன் நிருபர்

2023 ஆம் வருடத்திற்கான வரவு செலவு திட்ட அறிக்கை பல்லேப்பொல பிரதேச சபைத் தலைவர் ஜகத் வஸந்த திசாநாயக்கவினால் (ஸ்ரீ.ல.பொ.ஜ.பெ) சமர்ப்பிக்கப்பட்டது.

அடுத்த வருடத்திற்கான வருமானம் 10 கோடி 75 இலட்சத்து 20,900 எனவும் செலவினமாக பத்து கோடி 75 இலட்சத்து 20 ஆயிரத்து தொள்ளாயிரம் (107,520,900 ) ரூபாய் எனவும், செலவினமாக 10 கோடி 75 இலட்சத்து 19 ஆயிரத்து 200 எனவும் (107,519,200) தெரிவிக்கப்பட்டது. மேலதிக தொகையாக ஆயிரத்து எழுநூறு (1,700 ) எனவும் குறிப்பிடப்பட்டது. இதன் பிரகாரம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பிரதிநிதித்துவப்படுத்தும் 10 உறுப்பினர்கள் வரவு செலவுத்திட்ட அறிக்கைக்கு ஆதரவாக வாக்களித்ததுடன், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் ஒருவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பெண் உறுப்பினர் ஐவரும் ஆதரவாக வாக்களித்தனர். மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் ஒருவர் மாத்திரம் வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்லேப்பொல பிரதேச சபை நிர்வாகப் பொறுப்பு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதிக்கத்தில் உள்ளதுடன் இவர்களுக்கு 10 உறுப்பினர்கள் உள்ளனர். அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 02 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 05 உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணிக்கு 01 உறுப்பினருமாக பல்லேப்பொல பிரதேச சபையில் மொத்த எண்ணிக்கை 18 ஆகும்.

ஐ.தே. கட்சி உறுப்பினரும் எதிர்கட்சி தலைவருமான அமில குணதிலக்க லக்ஷ்மன் அம்பன்வல மற்றும் இவர்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் ஒருவருமாக மூன்று உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

# தலவாக்கலை - ஹற்றன் பஸ்களில் அதிகரிக்கும் கொள்ளை சம்பவங்கள்

## சந்தேகநபர்களாக பெண்கள் அடையாளம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

தலவாக்கலையிலிருந்து ஹற்றன் நோக்கி வந்த பஸ்சில் கொள்ளையில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

தலவாக்கலையிலிருந்து ஹற்றன் நோக்கி வந்த தனியார் பஸ்சில் கொட்டக்கலையைச் சேர்ந்த ஒருவர் 65 ஆயிரம் ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிடுவதற்காக எடுத்து வந்துள்ளார். இதன்போது குடாகம பகுதியில் வைத்து பெண்கள் மூவர் பஸ்சில் ஏறியுள்ளனர். இப்பெண்களில் ஒருவர் ஆணுக்கு அருகில் நின்றதாகவும் சில மணி நேரத்தின் பின்னர்



பணப்பையை காணவில்லையெனவும் அந்த பணத்தை அருகில் நிற்கும் பெண்னே திருடியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனைதொடர்ந்து அந்தப் பெண்ணை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். பெண்ணுடன் வந்த ஏனைய இருவரும் தலைமறைவாகியுள்ளதாக தெரியவருகிறது.

அவிசாவளைப் பகுதியைச் சேர்ந்த பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவருடன் மேலும் இரண்டு பெண்கள் தொடர்புபட்டுள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருவதுடன் மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக இவ்வாறான திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வருதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தலவாக்கலை நகரில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தங்க நகையும் பணமும் இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும் இச்சம்பவத்துடன் மூவர் தொடர்புபட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# முதல் விண்வெளி வீரர் யூரி ககாரின் நாட்டிய மரத்தை பாதுகாக்க நடவடிக்கை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

முதல் விண்வெளி வீரர் யூரிககாரின் 61 ஆண்டுகளுக்கு முன்னர் இரத்தினபுரி இ/சீவலி மத்திய கல்லூரி வளவில் நாட்டிய மரத்தைப்' பாதுகாப்பதற்கு தேசிய தாவரவியல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கிணங்க சீதாவக்க தாவரவியல் பூங்கா நிர்வாக அதிகாரிகள் இப்பகுதிக்கு சென்று யூரி ககாரின் மரம் என அழைக்கப்படும் இம்மரம் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை ரஷ்ய தூதுவராலயமும் இவ்விடயத்தில் அவதானம் செலுத்தியுள்ளதாக பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

யூரிககாரின் தனது விண்வெளிப் பயணத்தை நிறைவுசெய்து 8 மாதங்களின் பின்னர் தனது மனைவி சகிதம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இதன்போது விண்வெளிப்பயணத்தின் நினைவாக 1961 டிசம்பர் 11 ஆம் திகதி இம்மரத்தை நாட்டியுள்ளமைக்கான சான்றுகள் இப்பாடசாலையில் காணப்படுகின்றன.



# தியத்தலாவை ஜும்மா பள்ளிவாசல் தொழுகைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

ஊவா சுழற்சி நிருபர்

கடும் மழை,மண்சரிவு, தாழ் இறக்கம் காரணமாக தியத்தலாவை ஜும்மா பள்ளிவாசலில் ஜும்மா தொழுகை மற்றும் ஏனைய நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மா பிரசங்கம் மற்றும் தொழுகை தியத்தலாவை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள பொது சந்தை கட்டடத்தில் நடைப்பெற்று ஜும்மா பிரசங்கம் குறுகிய நேரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. ஜும்மா தொழுகையை நடாத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஹப்புத்தளை பிரதேசசபை தவிசாளர் கந்தசாமி கண்ணா முன்னின்று செய்தார்.

தற்காலிக திறந்த கொட்டகையில் ஜும்மா தொழுகைகள் இடம்பெற்றமையால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தியத்தலாவை இராணுவம் மற்றும் ஆகாயப்படைகளில் பணிபுரியும் முஸ்லிம் வீரர்கள், பிரதேச மக்கள் ஜும்மா பள்ளிவாசல் அமைப்பதற்கான உகந்த இடமொன்றை பள்ளிவாசல் நிர்வாகம் தேடி வருகின்றது. பள்ளிவாசல் அமைப்பதற்கு உகந்த காணியொன்றை கொள்வனவு செய்ய உதவுமாறு பள்ளி வாசல் நிர்வாகம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது. அதேவேளை நிலைமை சீராகும் வரை ஜும்மா தொழுகை மற்றும் ஏனைய தொழுகைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளதாக பள்ளிவாசல் நிர்வாகம் மேலும் அறிவித்துள்ளது.

# அரசாங்கம் பெருந்தோட்ட தரிசு நிலங்களை சுயதொழில் முயற்சிகளுக்கு வழங்கவேண்டும்

## முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம்

தலவாக்கலை குறூப் நிருபர்

அரசாங்கம் தரிசு நிலங்களை பொறுப்பேற்றால் அந்த காணியில் வெளியாரை குடியமர்த்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் அவற்றை தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பிரித்து வழங்க வேண்டுமெனவும் மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பெருந்தோட்ட தரிசு காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்றாலும் வெளியாரை அங்கு குடியேற்ற நாங்கள் இடமளிக்கமாட்டோம். அந்த காணிகளை தொழிலாளர் நலன்புரி திட்டங்களுக்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டும். இன்று பெருந்தோட்டங்களில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் மட்டுமே தோட்டத்தில் தொழில் செய்கின்றனர்.

ஏனையோர் வெளியில் தொழில் செய்கின்றனர். பெருந்திரளான இளைஞர் யுவதிகள் தொழில் இன்றி இருக்கின்றனர். வேலையில்லாத இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் வழங்குவதற்கு இந்த தரிசு நிலங்களை பயன்படுத்த வேண்டும். தரிசு நிலங்களில் சிறு கைத்தொழில் மற்றும் சுயதொழில் பேட்டைகள் அமைத்து இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்கலாம் அல்லது கால்நடைகள், விவசாயம் செய்வதற்கு பிரித்து வழங்கலாம். வீடு வசதி இல்லாத தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தலாம்.

பெருந்தோட்ட தரிசு காணிகளை அரசாங்கத் திட்டத்திற்கு கேட்டாலும் தோட்ட நிர்வாகங்கள் வழங்க மறுத்து வருவதாக பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். தோட்ட நிர்வாகங்கள் இதுவரை தொழிலாளர்களுக்கு எந்தவித நலன்புரி திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவில்லை.

தொழிலாளர்களின் உழைப்பை பெற்று கொள்ளை இலாபம் தேடுவதில் மாத்திரம் தோட்ட நிர்வாகங்கள் அக்கறை செலுத்தி வருகின்றன. எனவே, தோட்ட தொழிலாளர்கள் மீது அரசாங்கம் கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தோட்ட நிர்வாகங்களின் சர்வாதிகார போக்கினால் தேயிலை தோட்டங்கள் சீரழிந்து போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பெருந்தோட்டங்களையும் மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ளது. எனவே அரசாங்கம் தரிசு நிலங்களை பொறுப்பேற்றால் அந்த காணியில் வெளியாரை குடியமர்த்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.











முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு நல்லாசி வேண்டி பம்பலப்பிட்டி நாட்டுக்கோட்டை நகரத்தார் பழைய கதிரேசன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு இடம்பெற்றது.

சர்வதேச இந்துமத பீடம் ஏற்பாட்டில் ஆலய தர்மகர்த்தா ராஜேந்திர செட்டியார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கௌரவ அதிதியாக இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் வை.அனிருத், முன்னாள் ஜனாதிபதியின் இந்து சமய விவகார இணைப்பாளர் கலாநிதி இரா பாலச்சந்திர பாபுசர்மா குருக்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்ததுடன் அரசியல் பிரமுகர்கள், சமய தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# குடும்பங்கள் சிதைவுறுவதற்கு ஒரு காரணமாக இருப்பது பொருளாதாரமாகும்; இஸ்லாமிய சொத்துப் பங்கீடு தீர்வை வழங்குகிறது - அஷ்ஷெய்க் அக்ரம் அபூபக்கர்





சமூகம் சார்ந்த கல்வியாக இருக்கலாம். பொருளாதாரமாக இருக்கலாம். அவை சார்ந்த விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்தி அதில் இருந்து வருகின்ற முடிவுகளுக்கு ஏற்ப அந்த விடயத்தை எவ்வாறு அணுக வேண்டும் என்று சிந்தித்து பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காக முயற்சிக்கின்றோம். அப்பொழுதுதான் காலம், நேரம் விரையம் குறையும்.பல்வேறு விடயங்கள் தவிர்க்கப்படும். அவ்வாறு இல்லாமல் சமூகத்தில் பிரச்சினை எழுகின்ற போது ஒவ்வொரு வரும் ஒவ்வொரு பக்கத்தில் அந்தப் பிரச்சினையை நாம் அணுகுகின்றோம். அதற்குச் சார்பாகவும் எதிராகவும் பேசுகிறோம். ஆனால் அது எத்தகைய விளைவுகளைத் தந்திருக்கிறது என்பது ஒரு கேள்விக் குறி. குறித்த பிரச்சினைகளை எடுத்து ஆய்வு செய்து அந்த ஆய்வின் அடிப்படையில் அவற்றை முன்னெடுப்பதற்கு உரிய முயற்சிகளை நாங்கள் செய்கின்றோம் என்று ராய்ஸ் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் அக்ரம் அபூபக்கர் தெரிவித்தார். முப்தி.யூசுப் ஹனிபா எழுதிய 'சொத்துப் பங்கீடு குறித்த உரையாடல்கள்' எனும் நூல் வெளியீட்டு விழா காத்தான்குடி, கடற்கரை வீதி, அல் மனார் அறிவியற் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்,...

கல்வி பற்றிய நிறைய ஆய்வுகளை நாங்கள் செய்திருக்கின்றோம். அதற்கு ஏற்ப அதற்குரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கிறோம். பொருளாதாரம் பற்றிய சமூக ஆய்வுகளை செய்து அவற்றையும் முன்னெடுக்கிறோம். இவ்வாறான ஆய்வு நிறுவனம் 'சொத்துப் பங்கீடு பற்றிய உரையாடல்கள்' என்ற நூலை ஏன் வெளியிட முன்வர வேண்டும் என்ற கேள்வி உங்கள் முன் எழலாம். அதுவும் நாங்கள் செய்த ஆய்வின் வெளிப்பாடுகளுக்கான ஒரு தீர்வாக கண்டோம்.

குடும்பங்கள் சிதைவுறுவதற்கு ஒரு காரணமாக இருப்பது பொருளாதாரம் தான். இஸ்லாமிய சொத்துப் பங்கீடு அழுத்தமாக பங்களிப்பைச் செலுத்தும். அதைச் சரியாக நடைமுறைப்படுத்துகின்ற பொழுது நியாயமான சமூப் பிரச்சினைகளுக்குத் தீர்வு இருக்கிறது. குடும்பங்கள் சிதைவடைவது தவிர்க்கப்படுகிறது என்பதை நாங்கள் ஆழமாக நம்புகிறோம்.அந்த வகையில் தான் இந்த நூலை வெளியிட வேண்டும் என்று நாங்கள் கவனம் எடுத்தோம். இந்த தலைப்பினுடைய ஆழம், சமூகத்தில் பேசப்படாத ஒரு தலைப்பு. எவ்வளவோ சின்னச் சின்ன விடயங்களைப் பற்றியெல்லாம் பேசகிறோம். ஆனால் குர்ஆன் அழுத்தமாக பேசியிருக்கிறது இந்த சொத்துப் பங்கீடு பற்றி. குர்ஆன் வட்டியைப் போன்று வாரிசுரிமைச் சட்டத்தைச் சொல்லி இருக்கின்றது. வாரிசுரிமை என்ற அடிப்படையில் ஒரு மனிதன் சொத்துக்களைப் பிரிக்க வில்லை என்றால் அதுவும் குபுர்தான். சொத்துப் பங்கீட்டின் அடிப்படையில் ஒருவன் நம்பவில்லையானால் அவர் குர்ஆனை நிராகரிக்கிறான். குர்ஆன் அழுத்தமாகப் பேசுகின்ற விடயம். குர்ஆனை நிராகரித்தல் என்பது குபுர், எனவே அதுவும் நிரந்தரமாக நரகத்திற்கு கொண்டு செல்லக் கூடியது என்ற கருத்திலே இமாம் றஷுஒத்துல்லா இருக்கிறார்கள். எனவே தான் அப்படி ஒரு கருத்து இருக்கிறது. சமூகத்திலே இது ஆழமாகப் பேசப்பட வேண்டும். இந்த நூலின் தலைப்பு பேசப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் உலமாக்கள் அரபுக் கல்லூரி மாணவர்கள், பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர்கள், செல்வந்தர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் கலந்து சிறப்பித்தனர் நூலாசிரியர் முப்தி. யூசுப் ஹனிபா ஏற்புரை நிகழ்த்தினார்.

# உலகக் கிண்ண ஆரம்பத்திலேயே பெல்ஜியம், ஜெர்மனி வெளியேற்றம்

## ஜப்பான், மொரோக்கோ நொக் அவுட் சுற்றில்

உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் பலமான அணிகளான ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் அணிகள் ஆரம்ப சுற்றுடன் வெளியேறியுள்ளன.

உலகக் கிண்ணத்தின் ஈ மற்றும் எப் குழுவுக்கான கடைசி இரு போட்டிகளும் கடந்த வியாழன் (01) மற்றும் இலங்கை நேரப்படி நேற்று (02) அதிகாலையில் நடைபெற்றன.

இதில் கொஸ்டாரிக்காவை எதிர்கொண்ட ஜெர்மனி அணி 4–2 என் கோல் கணக்கில் வெற்றியீட்டியபோதும் அந்தக் குழுவில் நடந்த மற்றைய போட்டியில் ஸ்பெயின் அணியை ஜப்பான் 2–1 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்தியதால் ஜெர்மனி அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

ஜெர்மனி தனது முதல் போட்டியில் ஜப்பானிடம் அதிர்ச்சித் தோல்வியை சந்தித்ததோடு ஸ்பெயினுடனான போட்டியை சமன் செய்து தனது குழுவில் மூன்றாவது இடத்தையே பிடித்தது.

இதனால் ஈ குழுவில் இருந்து ஜப்பான் மற்றும் ஸ்பெயின் அணிகள் நொக் அவுட் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டது.






இதேவேளை எப் குழுவில் குரோசியாவுக்கு எதிரான போட்டியை கோலின்றி சமநிலை செய்த உலகின் இரண்டாம் நிலை அணியான பெல்ஜியம் உலகக் கிண்ணத்தில் இருந்து வெளியேறியது.

எப் குழுவின் மற்றைய போட்டியில் மொரோக்கோ அணி கனடாவை வீழ்த்தியதை அடுத்தே பெல்ஜியத்திற்கு இந்த நிலை ஏற்பட்டது. மொரோக்கோ பெல்ஜியத்தை ஏற்கனவே வீழ்த்திய நிலையில் அந்த அணி எப் குழுவில் முதலிடத்தை பிடித்து 36 ஆண்டுகளின் பின் நொக் அவுட் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டது.

அந்தக் குழுவில் இரண்டாவது அணியாக கடந்த முறை உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டி வரை முன்னேறிய குரோசியா நொக் அவுட் சுற்றுக்கு தகுதி பெற்றது.

இதன்படி உலகக் கிண்ண நொக் அவுட் சுற்றில் பெல்ஜியம் அணி ஸ்பெயினை எதிர்கொள்ளவிருப்பதோடு ஜப்பான் அணி குரோசியாவுடன் பலப்பரீட்சை நடத்தும்.

உலகக் கிண்ணத்தின் ஆரம்ப சுற்றுப் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் இன்று (03) தொடக்கம் நொக் அவுட் ஆட்டங்கள் ஆரம்பிமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

### டி20 உலகக் கிண்ணம்:

# விழிப்புலனற்றோர் இலங்கை அணியினர் இந்தியா பயணம்

**வடகொழும்பு தினகரன் நிருபர்**

மூன்றாவது டி20 விழிப்புலனற்றோர் மாற்றுத் திறனாளிகள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க இலங்கை அணி இன்று (03) மாலை டில்லி நோக்கி பயணிக்கவுள்ளது.

விழிப்புலனற்றோர் இலங்கை தேசிய கிரிக்கெட் அணிக்கு தமிழ் சத்துருவன் அணித் தலைவராகவும், உபதலைவராக சமன் துஷாரவும் செயற்படுகின்றனர்.

இம்மாதம் 05ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறும் டி20 விழிப்புலனற்றோர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கையுடன் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, நேபாளம், தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் பங்கேற்கின்றன.

24 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடர் டில்லி, மும்பாய், பெங்களூர், கோவாவில் நடைபெறும். ஏற்கனவே இடம்பெற்ற 2012, 2017 விழிப்புலனற்றோர் உலகக் கிண்ண போட்டியில் இலங்கை அணி மூன்றாம் இடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய தைக்கொண்டோ போட்டி: கல்முனை ஸாஹிரா 5 பதக்கம்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட தைக்கொண்டோ சுற்று போட்டியில் கலந்து கொண்ட கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவர்கள் ஒரு தங்கப்பதக்கம் உட்பட மொத்தமாக ஐந்து பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதில் 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான 80–87 கிலோகிராம் எடைப் பிரிவில் ஜே.ஏ.சுமைத் தங்கப் பதக்கத்தை வென்றார். இப் போட்டியில் இந்தக் கல்லூரி முதல் தடவையாக பங்குபற்றி தேசிய மட்டத்தில் சாதனை படைத்திருப்பதாக கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் மகளிர் கால்பந்து சுற்றுப்போட்டி

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு கல்வி வலயத்தின் 100 நாள் செயற்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மகளிர் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டி மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தின் அதிபர் அ.குலேந்திரராஜா தலைமையில் வித்தியாலயத்தின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களின் ஒழுங்கமைப்பில் நடாத்தப்பட்டது.

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட 14,16 மற்றும் 19 வயதுப்பிரிவில் 19 அணிகள் இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றின.

இதில் 14 வயதுப் பிரிவில் புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய அணியும், 16 வயதுப்பிரிவில் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி அணியும் 19 வயதுப் பிரிவில் புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய அணியும் முதலாவது இடத்தினை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நடுவருக்கு அதிருப்தியை வெளியிட்ட வனிந்து ஹஸரங்கவுக்கு தண்டனை




இலங்கை அணியின் சகலதுறை வீரர் வனிந்து ஹஸரங்கவுக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஒரு தரக்குறைப்பு புள்ளியை தண்டனையாக வழங்கியுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக கடந்த புதன்கிழமை (30) நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியின் போது, நடுவரின் தீர்ப்பை அவமதிக்கும் வகையில் செயற்பட்ட காரணத்தால் அவரை ஐ.சி.சி கண்டித்துள்ளது.

இலங்கை அணியின் 26ஆவது ஓவரை வனிந்து ஹஸரங்க வீசியபோது, நஜிபுல்லாஹ் ஷர்தானுக்கு எதிராக எல்.பி.டபிள்யு ஆட்டமிழப்பொன்றை வனிந்து ஹஸரங்க கோரினார். இலங்கை அணியின் மேன்முறையீட்டின்படி ஆராய்ந்த மூன்றாவது நடுவர், பந்து துடுப்பாட்ட வீரரின் கையுறையில் படுவதாக தெரிவித்து ஆட்டமிழப்பு அல்ல என அறிவித்தார்.

இதன்காரணமாக சற்று கோபமடைந்த வனிந்து ஹஸரங்க நடுவரின் தீர்ப்பை ஏற்க மறுத்ததுடன், ஐ.சி.சியின் விதிமுறைகளை மீறும் வகையில் மைதானத்தில் நடந்துக் கொண்டார்.

எனவே போட்டி நிறைவடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட போட்டி மத்தியஸ்தர் மற்றும் நடுவர்களுக்கு மத்தியிலான விசாரணையில் வனிந்து ஹஸரங்க குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவருக்கு ஒரு தரக்குறைப்பு புள்ளி வழங்கப்பட்டுள்ளது.

வீரர் ஒருவர் 24 மாத காலப்பகுதியில் 4 தரக்குறைப்பு புள்ளிகளை பெறுவாராயின் அது, ஒரு இடைநீக்க புள்ளியாக மாறும். இதில் இரண்டு இடைநீக்க புள்ளிகளை பெறும் ஒரு வீரர், ஒரு டெஸ்ட் அல்லது இரண்டு ஒருநாள் போட்டிகள் அல்லது 2 டி20ஐ போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ண வலைப்பந்து: இலங்கை அணி 'சி' குழுவில்



தென்னாபிரிக்காவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள வலைப்பந்தாட்ட உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி சி குழு இடம்பெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நடைபெறும் வலைப்பந்தாட்ட உலகக் கிண்ணத்திற்கான குழு விபரங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

சி குழுவில் இலங்கை அணி இடம்பெற்றுள்ளதுடன், இந்த குழுவில் உலக தரவரிசையில் 4ஆவது இடத்தை பிடித்துள்ள ஜமைக்கா, தொடரை நடத்தும் மற்றும் ஐந்தாவது இடத்தில் உள்ள தென்னாபிரிக்கா மற்றும் 9ஆவது இடத்தில் உள்ள வேல்ஸ் ஆகிய நாடுகள் இடம்பிடித்துள்ளன.

இலங்கை அணி தற்போது சர்வதேச தரவரிசையில் 16ஆவது இடத்தை பிடித்துள்ளது. நடப்பு ஆசிய சம்பியனான இலங்கையின் மிகச்சிறந்த தரவரிசை இடமாகவும் இது அமைந்துள்ளது.

உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட தொடரில் 16 அணிகள் பங்கேற்பதுடன், அவைகள்; நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் ஏ குழுவில் அவுஸ்திரேலியா, டொங்கா, சிம்பாப்வே மற்றும் பீஜி ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

பி குழுவில் இங்கிலாந்து, மலாவி, ஸ்கொட்லாந்து மற்றும் பார்படோஸ் அணிகள் இடம்பிடித்துள்ளதுடன், டி குழுவில் நியூசிலாந்து, உகண்டா, ட்ரினிடேட் மற்றும் டொபேகோ மற்றும் சிங்கபூர் ஆகிய அணிகள் இடம்பிடித்துள்ளன.

உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட தொடர் அடுத்த ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 6ஆம் திகதிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல் ஏலத்துக்கு 23 இலங்கை வீரர்கள் பதிவு



அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல் தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் இலங்கையின் 23 வீரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல் வீரர்கள் ஏலம் இம்மாதம் 23ஆம் திகதி கொச்சியில் நடைபெறவுள்ளது. இந்த வீரர்கள் ஏலத்தில் வீரர்களை பதிவுசெய்வதற்கான இறுதித் திகதி நவம்பர் 30 உடன் நிறைவடைந்தது.

அதன்படி மொத்தமாக 991 வீரர்கள் ஐ.பி.எல் ஏலத்தில் தங்களுடைய பெயர்களை பதிவுசெய்துள்ளனர்.

இம்முறை தொடரில் அதிகூடிய நிர்ணய தொகையாக 2 கோடி அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்தத் தொகையை அஞ்சலோ மெதிவ்ஸ் நிர்ணயித்துள்ளார்.

அதேநேரம் மற்றுமொரு இலங்கை வீரரான குசல் பெரேரா ஒரு கோடியை நிர்ணயத்தொகையாக பதிவுசெய்துள்ளார்.

ஏனைய இலங்கை வீரர்கள் மற்றும் அவர்களின் நிர்ணயத்தொகை தொடர்பில் தகவல்கள் வெளியாகவில்லை.

ஐ.பி.எல் தொடரின் ஏலத்தில் 87 வீரர்களுக்கான இடங்கள் மாத்திரமே உள்ளதுடன், இதில் வெளிநாட்டு வீரர்களுக்கான 30 இடங்கள் உள்ளன.

இந்த நிலையில் ஏலத்துக்கு 277 வெளிநாட்டு வீரர்கள் மற்றும் 714 இந்திய வீரர்கள் தங்களுடைய பெயர்களை பதிவுசெய்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 3ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ராஜா ஜுவலர்ஸின் Diamond Emporium திறந்து வைப்பு

தங்க உலகின் போட்டியற்ற மன்னனான ராஜா ஜுவலர்ஸ், அதன் புதிய வைர அனுபவ மையத்தை சமீபத்தில் திறந்து வைத்துள்ளது. இதற்குப் 'டயமண்ட் எம்போரியம்' (Diamond Emporium) எனும் பொருத்தமான பெயரும் சூட்டப்பட்டுள்ளது. உலகத் தரம் வாய்ந்த நகைகளை உருவாக்குவதற்காகவும், வாடிக்கையாளர்களுக்கு அவர்களுக்கான மதிப்பை வழங்குவதற்குமான அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் இணையும் இந்த புதிய அம்சமானது, திறமையாக வடிவமைக்கப்பட்ட வைரங்கள் மற்றும் இலங்கையின் பெறுமதியான கற்களின் கவர்ச்சியான வரிசைகளை கொண்டுள்ளது. இந்த டயமண்ட் எம்போரியத்தின் திறப்பு விழாவானது, இத்தொழில்துறையிலுள்ள ஏராளமான வல்லுநர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் முன்னிலையில் சிறப்பாக இடம்பெற்றது.



ராஜா ஜுவலர்ஸ் அதன் ஆரம்பத்திலிருந்தே, உலகப் புகழ்பெற்ற நகைகளைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தி வருகின்றது. இலங்கையின் தனித்துவ அடையாளத்தை உள்ளடக்கியவாறு, தரம் மற்றும் மதிப்பில் அதிக கவனத்துடன் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பயணத்தில், இணையற்ற நிபுணத்துவம் மற்றும் கைவினைத்திறன் ஆகியவற்றால் வலுவூட்டப்பட்டு, 95 வருடங்களாக தொழில்துறையில் பெற்ற அனுபவத்தை புடம்போட்டு காண்பிக்கும் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இந்த டயமண்ட் எம்போரியம் அமைகின்றது. கொழும்பில் உள்ள ராஜா ஜுவலர்ஸின் பிரதான காட்சியறையில் அமைந்துள்ள இதில், புதிய மேலதிகமான அம்சமாக, நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட நகைகளின் தனித்துவமான தொகுப்பை வாடிக்கையாளர்கள் பெறலாம். திறமையான உற்பத்திப் பணியாளர்கள் குழுவுடன் இணைந்து பல்வேறு புதிய வடிவமைப்புகளைக் கொண்டுள்ள டயமண்ட் எம்போரியம், வாடிக்கையாளகளின் தேவைகளுக்கு ஏற்றவாறு நகைத் தயாரிப்புகளை அமைத்து, மேம்படுத்தி வழங்கும் திறனைக் கொண்டுள்ளது. ராஜா ஜுவலர்ஸின் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு, தயாரிப்புகளின் ஒரு குறிப்பிட்ட பட்டியலைக் காண்பிப்பதிலும் பார்க்க, இந்த வைர அனுபவ மையமானது ஒரு தனிப்பயனாக்கப்பட்ட அனுபவத்தை வழங்குவதை உறுதி செய்கிறது.

இந்த முக்கியமான நிகழ்வு மற்றும் இப்புதிய முன்னெடுப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த, ராஜா ஜுவலர்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அத்துல எலியபுர, "எமது பல வருட நிபுணத்துவம் மற்றும் எமது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு மகத்தான பெறுமதியான சேவையை வழங்குவதில் நாம் பெருமை கொள்கிறோம். டயமண்ட் எம்போரியம் ஆனது, எமது தனித்துவமான இலங்கை அடையாளத்தையும், ஒன்பது தசாப்தங்களாக தொழிற்துறையில் உறுதியான வீரனாக நிலைத்து நிற்கும் உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமத்தையும் உள்ளடக்கியதாக உள்ளது.

இந்த புதிய முயற்சி எமக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கும் இதுவரை கண்டிராத வாய்ப்பை ஏற்படுத்தும் என நாம் நம்புகிறோம்." என்றார்.

தினகரன் வர்த்தக உலா
சம்ஸ் பாஹிம்

## ORIGIN TEA நிறுவனம்

# லேடி ரிட்ஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரிக்கு மருந்துகளை நன்கொடையாக வழங்கியது

ருஸைக் பாரூக்

இலங்கையில் உள்ள ORIGIN TEA ஒரிஜின் டீ நிறுவனம் அண்மையில் கொழும்பு பொரளையில் உள்ள லேடி ரிட்ஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரிக்கு ஆஸ்திரேலியா டாலர் 3000 மதிப்புள்ள சில மருந்துகளை நன்கொடையாக வழங்கியது.



சிகிச்சைக்காகக் கொண்டு வரப்படும் குழந்தைகளில் பெரும்பாலானோர் குறைந்த சமூக பொருளாதாரப் பின்னணி கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

ஒரிஜின் டீ பிரைவேட் லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரி கிறிஸ்டோபர் சீட்டன், லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் பணிப்பாளர் டாக்டர் ஜி. விஜேசூரியவிடம் மருந்துகளை மருத்துவமனை வளாகத்தில் கையளித்தார்.ஒரிஜின் டீ ஆஸ்திரேலியாவில் கிறிஸ்டோபர் சீட்டன் மற்றும் லாரன்ஸ் சீட்டன் ஆகிய இரு சகோதரர்களால் நடத்தப்படிகிரி நிறுவனமாகும்.வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் சந்துசித சேனாபதி, திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் சாவித்திரி தர்மரத்ன, ஒரிஜின் டீ குழு பணிப்பாளர் மேனக அத்துகோரள, பணிப்பாளர் நிஷாந்த ராஜபக்ஷ மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

லேடி ரிட்ஜ்வே மருத்துவமனைக்கு மருந்துகள் மூலம் உதவுவதற்கு Origin Tea எடுத்த முயற்சியை மருத்துவர்கள் பாராட்டினர்.

# மக்கள் வங்கி Eleganc மற்றும் Excelsior ஆகிய இரண்டு விசேட வங்கிச் சேவைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது

இலங்கையின் முதன்மையான உரிமம் பெற்ற வர்த்தக வங்கியான மக்கள் வங்கி Eleganc மற்றும் Excelsior என்ற நாமங்களில் இரண்டு புதிய தயாரிப்பு வழங்கல்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் அதன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வாழ்க்கை முறை தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட விரிவான வங்கிச்சேவை தீர்வுகளை வழங்குகிறது. Eleganc என்பது ஒரு தனிப்பட்ட வங்கிச்சேவை வசதியாகும். இது செல்வந்தர்களின் வாழ்க்கைக்கு கூடுதல் மதிப்பு சேர்க்கும். நுஓஉநடளழைச என்பது கூடுதல் தொகையிலான சம்பளம் பெறுபவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட வங்கிச் சேவைத் திட்டமாகும்.

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவரான சுஜீவ ராஜபக்ஷ அவர்கள் இரண்டு தயாரிப்புகளின் அறிமுக நிகழ்வில் உரையாற்றுகையில் "எமது ஸ்தாபகக் கோட்பாடுகளை உண்மையாக கடைபிடிக்கும் அதே வேளையில் மாறிவரும் காலங்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நாம் வேகத்துடனும் விவேகத்துடனும் செயல்பட்டு வருகிறோம். விசேடமாக வடிவமைக்கப்பட்ட எமது வங்கிச்சேவை சேவை திட்டங்களான Eleganc மற்றும் Excelsior ஆகியவற்றின் அறிமுகமானது எமது பயணத்தில் ஒரு முக்கிய சாதனை இலக்கினைக் குறிக்கிறது. வாடிக்கையாளர்கள் சௌகரியம் நெகிழ்வுத்தன்மை அங்கீகாரம் மற்றும் தனிப்பட்ட அனுபவம் ஆகியவற்றைத் தேடியே வங்கிகளுக்கு வருகிறார்கள். அதனாலேயே மக்கள் வங்கியில் நாம் அதிசிறந்த தொழில்நுட்பம் வர்த்தக நாமமிடல் மற்றும் மகத்துவமான சேவை ஆகியவற்றில் அதிக அளவில் முதலீடு செய்துள்ளோம்" என்று குறிப்பிட்டார்.



மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும்ஃபொது முகாமையாளருமான ரஞ்சித் கொடித்துவக்கு அவர்கள் இரண்டு புதிய தயாரிப்பு வழங்கல்களைப் பற்றி கருத்து வெளியிடுகையில் "வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்க்கை முறை தேவைகளுக்கு பொருந்தக்கூடிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை நாடுவது அதிகரித்துள்ளது. மக்கள் வங்கியில் நாம் இதை அடையாளம் கண்டு Eleganc என்ற தனிப்பட்ட வங்கிச்சேவை முன்மொழிவு மற்றும் நுஓஉநடளழைச என்ற கூடுதல் தொகையில் சம்பளம் பெறுபவர்களுக்காக உருவாக்கப்பட்ட வங்கிச் சேவைத் திட்டம் ஆகியவற்றை வடிவமைத்து அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்த இரண்டு தயாரிப்புகளும் வாடிக்கையாளர்களை மையப்படுத்துவதற்கு அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் மக்கள் வங்கி கொண்டுள்ள உறுதிப்பாட்டின் தெளிவான அறிகுறியாகும். செயல்பாட்டின் ஒவ்வொரு அம்சத்திலும் அதியுயர்ந்த வாடிக்கையாளர் திருப்தியை வழங்குவதில் வங்கி உறுதியான கவனம் செலுத்தியுள்ளது. அதனாலேயே பல்வேறு வாடிக்கையாளர் திருப்தி மதிப்பீட்டுத் திட்டங்கள் மூலம் ஒவ்வொரு தொடு புள்ளியிலும் எங்கள் சேவையின் தரத்தை அளவிடத் தொடங்கியுள்ளோம். மேலும் அந்த அளவீடுகளை எங்கள் முக்கிய பெறுபேற்றுத்திறன் குறிகாட்டிகளில் உட்பொதித்துள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

# HNB - Darazஇணைந்து SME களுக்குe-commerce தளத்திற்கானவசதிகளைவழங்குகிறது

இலங்கைவத்தகத்தில்டிஜிட்டல் பிரவேசத்தைவலுப்படுத்தும்வகையில், தனியார்துறைவங்கியான HNB PLC, தெற்காசியாவின்முன்னணிecommerceதளமானDaraz உடன்இணைந்துவங்கியின்சிறிய மற்றும்நடுத்தரஅளவிலானதொழில்முனைவோர்களின்(SME) பரந்தவலையமைப்பில்இணைந்துள்ளது.



இந்தஒத்துழைப்பின்காரணமாக HNB SME வாடிக்கையாளர்களுக்குபரந்தஅளவிலானசேவைகள்மற்றும்ஒன்லைன்பிரவேசத்தைமேற்கொள்வதற்கான வசதிகளைப்பெறஉதவுகிறது. இதுதொடர்பானபுரிந்துணர்வுஒப்பந்தத்தில்கைச்சாத்திடுவதற்காகநடைபெற்றவிசேடநிகழ்வில் HNB பிரதிப்பொதுமுகாமையாளர் – வாடிக்கையாளர்மற்றும் SME வங்கியியல்சஞ்ஜேய்விஜேமான்னமற்றும்Kaymu Lanka (Pvt) Ltd நிறுவனத்தின்முகாமைத்துவப்பணிப்பாளர்ரகில்பெர்னாண்டோஆகியோர்கலந்துகொண்டனர்.

"தற்போதையபொருளாதாரநிலைமைகளின்அடிப்படையில், கடைகளைத்திறப்பதற்கானசாத்தியக்கூறுகள்மிகவும்குறைவாகவேஉள்ளன, ஆனால்தொழில்நுட்பத்தின்காரணமாக, வர்த்தகநடவடிக்கைகள்இப்போதுஒன்லைனில்சூடுபிடித்துள்ளன. மிகப்பெரிய SME போர்ட்ஃபோலியோவைக்கொண்டவங்கியாக, எங்கள்வாடிக்கையாளர்களுக்குபுதியவாய்ப்புகளைவழங்குவதும்அவர்களின்வளர்ச்சிப்பாதையைஅமைப்பதும்எங்கள்கடமைஎன்றுநாங்கள்நம்புகிறோம். Darazஉடன்நாங்கள்கைக்கோர்த்துக்கொண்டதனால்எங்கள்வாடிக்கையாளர்களுக்குபிராந்தியரீதியாகபுதியவழிகளையும்சந்தைவாய்ப்புக்களையும்ஏற்படுத்தும்,மேலும்பலர்தங்கள்ஒன்லைன்இருப்பைவலுப்படுத்தஇந்ததனித்துவமானவாய்ப்பைப்பயன்படுத்துவார்கள்என்றுநாங்கள்நம்புகிறோம்." எனHNBசிறியமற்றும்நடுத்தரஅளவிலானதொழில்முனைவோர் (SME) பிரிவின்உதவிப்பொதுமுகாமையாளர்கைலைவாசன்இந்திரவாசன்தெரிவித்தார்.

புதியவணிகங்களைநிறுவியவாடிக்கையாளர்களுக்குDaraz Universityவழங்கும்கல்விப்பொருட்களுக்கானவரையறையற்றஅணுகலைவழங்குகிறது.மேலும், HNB வாடிக்கையாளர்களுக்குமுதல்மூன்றுமாதங்களுக்கானதரகுப்பணம்தள்ளுபடிசெய்யப்படும்.

# கடன்பத்திரங்கள் (Debentures) வழங்கப்பட்ட முதலாவது தினத்தில் மேலதிக சந்தா மூலம் 10 பில்லியன்களைத் திரட்டிய கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கியின் 10 பில்லியன் ரூபாவுக்கான கடன் பத்திர விநியோகச் செயற்பாடுகள் அவை ஆரம்பிக்கப்பட்ட 2022 டிசம்பர் 1ம் திகதியே ஒரு சில மணிநேரத்திற்குள் மேலதிகமாக சந்தாக்கள் செலுத்தப்பட்டதன் மூலம் முடிவடைந்து விட்டதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது. முதலீட்டாளர்களிடம் இருந்து இது வங்கிக்கு கிடைத்துள்ள குறிப்பிடத்தக்க நம்பிக்கை வாக்காகும் என வங்கி மேலும் அறிவித்துள்ளது.

வங்கியின் இரண்டாம் வரிசை மூலதனத்தை மேலும் ஸ்திரப்படுத்தும் வகையில் 10 பில்லியன் ரூபாவுக்கான கடன் பத்திரங்களை வங்கி விநியோகித்தது. வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வரிசையில் இசைவாக்கமற்ற முதிர்ச்சி நிலையை சீர் செய்வதற்காகவும் மற்றும் வங்கியின் கடன் வரிசையை விரிவாக்குவதற்கான நிதியைத் திரட்டவும் குறிப்பாக தேசிய பொருளாதாரத்துக்கு ஆதரவு வழங்குவதை கருத்திற் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் (SME) மற்றும் ஏற்றுமதி சார்பு தொழில்துறைகளுக்கான கடன் வசதிகள் என்பனவற்றை மேம்படுத்தும் நோக்கில் இந்த கடன் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த மேலதிக சந்தாக்கள் பற்றி கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க " நிறுவனங்கள் மற்றும் தனி முதலீட்டாளர்கள் வங்கியின் எதிர்கால சுபிட்சத்தில் வைத்துள்ள நம்பிக்கை மற்றும் விசுவாசம் கொமர்ஷல் வங்கியையும் அதேபோல் பொது மக்களையும் தீவிரமாக உற்சாகப்படுத்துகின்றது. இந்த மூலதன உட்செலுத்தலானது வங்கியை மேலும் ஸ்திரப்படுத்துகின்றது. அத்தோடு வளர்ச்சியை மேலும் தீவிரப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது" என்று கூறினார்.

கொமர்ஷல் வங்கியின் Basel III இணக்கம், வரிசை 2 பட்டியலிடப்பட்ட, வரிசைப்படுத்தப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட, மீளப்பெறக் கூடிய கடன் பத்திரங்கள் நம்பகத்தன்மை பண்புகளோடு 100 ரூபா பெறுமதி கொண்டதாக மூன்று காலப்பகுதிகள் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டன. வகை A ஐந்தாண்டு காலம். வகை B ஏழாண்டு காலம், வகை C 10 ஆண்டு காலம் என அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஐந்தாண்டு கடன் பத்திரங்களுக்கு வருடாந்தம் 28% நிலையான வட்டி, (AER 29.96) அரையாண்டுக்கு ஒரு முறை, ஏழு மற்றும் பத்து ஆண்டுகளுக்கான கடன் பத்திரங்களுக்கு முறையே வருடாந்தம் 27% நிலையான வட்டி (AER 28.82%) மற்றும் 22% நிலையான வட்டி (AER 23.21%) அரையாண்டுக்கு ஒரு தடவை வழங்கப்படும்

# ஜோன் கீல்ஸ் ஃபவுண்டேஷன், டொய்ச் வங்கியுடன் உடன் இணைந்து ஜோன் கீல்ஸ் பிரஜா சக்தி டிஜிட்டல் கற்றல் முயற்சியின் இரண்டாம் கட்டத்தை அறிமுகப்படுத்துகிறது

'4வது நிலையான வளர்ச்சி இலக்கை அடைவதற்கு ஏதுவாக, தரமான கல்விக்கான அணுகலுக்கான டிஜிட்டல் தகவல்தொடர்பு என்பது பல்வேறு வகையான அறிவுக்கு நம்மை நெருக்கமாகக் கொண்டுவரும் ஒரு பாலமாக மாறியுள்ளது. இலத்திரனியல் சாதனம் இல்லாததால், இன்று இங்கு இருக்கும் நம்மில் பலருக்கு இதுபோன்ற அறிவைப் பெறுவது சவாலாக உள்ளது. எனவே, எமக்கு பரிசாக வழங்கப்பட்டுள்ள இந்த இலத்திரனியல் சாதனத்தின் மூலம் அறிவின் புதிய உலகத்தை அணுகும் வாய்ப்பை எனக்கும் எனது சகாக்களுக்கும் வழங்கியமைக்காக இந்த சிறந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."– ஜாஎல புனித ஜோசப் கனிஷ்ட வித்தியாலய மாணவர். ஜோன் கீல்ஸ் ஃபவுண்டேஷன் (ஜேகேஎப்ஃ) டொய்ச் வங்கியுடன் இணைந்து ஜோன் கீல்ஸ் பிரஜா சக்தி டிஜிட்டல் கற்றல் முயற்சியின் இரண்டாம் கட்டத்தை நவம்பர் 11, 2022 அன்று அறிமுகப்படுத்தியது. கொழும்பு, சினமன் கிரேன்ட்ல் நடைபெற்ற இந்த நிகழ்வில், கொழும்பு 2, ஜாஎல மற்றும் ரணால ஜோன் கீல்ஸ் பிரஜா சக்தி இடங்களில் உள்ள 11 பாடசாலைகளைச் சேர்ந்த 80 மாணவர்களுக்கு டெப்லட்கள் மற்றும் டேட்டா பேக்கேஜ்கள் வழங்கப்பட்டன.







இந்நிகழ்வில் திரு.குலதிலக ஜாஎல பிரதேச கல்விப் பணிப்பாளர், கிருஷான் பாலேந்திரா, தலைவர் ஜோன் கீல்ஸ் குழுமம், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் (ஜேகேஎச்) துறைத் தலைவர்கள், சரித சுபசிங்க, நயனா மாவில்மட மற்றும் நதிஜாதம்பையா, கார்மலின் ஜயசூரிய ஜேகேஎச் இன் கூட்டாண்மை சமூக பொறுப்பின் தலைவர், டொய்ச் வங்கியின் பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துத்தின் – நிரஞ்சன் ஃபிகுராடோ, ஜனத் இலங்கதிலக, பிரபாத் சமிந்திர, ரீஸா மன்சூர் மற்றும் சரித தும்பரகே, டயலொக் அக்ஸியாட்டா பிஎல்சி இன் பிரதிநிதிகள் ஹர்ஷ டி சொய்சா மற்றும் நிஷால் ஹெரத், பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், பயனாளிகள் மற்றும் மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் கலந்து கொண்டனர்.

ஜோன் கீல்ஸ் பிரஜா சக்தி டிஜிட்டல் கற்றல் முன்முயற்சி, கோவிட்19 தொற்றுநோய்க்கு மத்தியில் பொதுத் தேர்வுகளுக்குத் தயாராகும் பின்தங்கிய பாடசாலை பிள்ளைகளுக்கான ஆன்லைன் அடிப்படையிலான கற்றலை எளிதாக்கும் வகையில், டொய்ச் வங்கியுடன் இணைந்து 2021 இல் தொடங்கப்பட்டது.

முன்னோடித் திட்டத்தில் (கட்டம் 1) மொத்தம் 100 சம்சுங் A7 டெப்கள் மற்றும் டேட்டா பேக்கேஜ்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கு கொழும்பு 2 மற்றும் ரணாலவில் உள்ள அடையாளம் காணப்பட்ட ஜோன் கீல்ஸ் பிரஜா சக்தி இடங்களில் அந்தந்த கற்றல் நடவடிக்கை காலத்திற்கு விநியோகிக்கப்பட்டது. 2 ஆம் கட்டத்தின் கீழ், 80 சம்சுங் A8 டெப்கள் மற்றும் டேட்டா பேக்கேஜ்கள் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. டொய்ச் வங்கி இணை நிதியாளராக உள்ள இந்த முன்முயற்சியில் ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஆட்டோமேஷன் (ஜேகேஓஏ) மற்றும் டயலொக் அக்ஸியாட்டா பிஎல்சி ஆகியவை முறையே சலுகை விலையில் சாதனங்கள் மற்றும் டேட்டா பேக்கேஜ்களை வழங்குகின்றன.

# க.பொ.த. உ/த 2021 வெட்டுப்புள்ளி விபரங்கள்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## பல்கலைக்கழகம் நுழைவதற்கான வெட்டுப் புள்ளிகளின் முழு விபரங்கள் இலங்கையில் வெவ்வேறு மாவட்டங்களில் இருந்து பல்கலைக்கழகங்களில் பல்வேறு பட்டப்படிப்புகளுக்கு தேர்ந்தெடுப்பதற்கான

### (Z-ஸ்கோர் G.C.E. (ADVANCED LEVEL) EXAMINATION, 2021

| | |
|---|---|
| Number sat for the G.C.E. (A/L) Examination, 2021 | 283,616 |
| Number eligible for university admission for the academic year 2021/2022 | 171,497 |
| Number applied for university admission for the academic year 2021/2022 | 91,115 |
| Number of students admitted to universities for the previous academic year (Academic year 2020/2021) | 43,927* |
| Number of students selected under the normal intake for university admission for the academic year 2021/2022(before re-scrutiny ) | 41,228** |

* Including the additional intake & other special intakes
** Excluding the additional intake & other special intakes

The detailed breakdown of the above figures is given below.

| NO | SUBJECT STREAM | NUMBER SAT FOR THE A/L Examination 2021 | NUMBER ELIGIBLE FOR UNIVERSITY ADMISSION | NUMBER APPLIED FOR UNIVERSITY ADMISSION | NUMBER SELECTED FOR UNIVERSITY ADMISSION UNDER THE NORMAL INTAKE |
|---|---|---|---|---|---|
| 1 | Biological Science | 42,547 | 23,996 | 16,948 | 9,749 |
| 2 | Physical Science | 34,916 | 19,233 | 14,317 | 8,020 |
| 3 | Commerce | 56,771 | 37,799 | 15,735 | 7,701 |
| 4 | Arts | 111,320 | 68,959 | 32,056 | 11,314 |
| 5 | Engineering Technology | 19,715 | 12,243 | 6,331 | 2,236 |
| 6 | Biosystems Technology | 10,203 | 6,857 | 4,300 | 1,543 |
| 7 | Other (students who do not belong to any of the above six streams) | 8,144 | 2,410 | 1,428 | 665 |

**NEWLY INTRODUCED COURSES OF STUDY FOR THE ACADEMIC YEAR 2021/2022**

| NO. | COURSE NAME | UNIVERSITY | NUMBER PROPOSED |
|---|---|---|---|
| 1 | Financial Economics | University of Sri Jayewardenepura | 50 |
| 2 | English Language & Applied Linguistics | Uva Wellassa University of Sri Lanka | 50 |
| 3 | Banking & Insurance | University of Vavuniya, Sri Lanka | 50 |
| 4 | Creative Music Technology & Production | University of Sri Jayewardenepura | 50 |
| | Total | | 200 |

**EXISTING COURSES OF STUDY OF THE UNIVERSITIES WHICH HAVE BEEN INTRODUCED IN OTHER UNIVERSITIES FOR THE ACADEMIC YEAR 2021/2022**

| NO. | COURSE OF STUDY | UNIVERSITY | NUMBER PROPOSED |
|---|---|---|---|
| 1 | Computer Science | University of Sri Jayewardenepura | 50 |
| 2 | Software Engineering | University of Sri Jayewardenepura | 50 |
| 3 | Information Systems | University of Sri Jayewardenepura | 50 |
| | Total | | 150 |

University Grants Commission
No. 20, Ward Place,
Colombo 07.
02.12.2022

UNIVERSITY ADMISSION - ACADEMIC YEAR 2021/2022
[Based on the results of the G.C.E. (Advanced Level) Examination 2021 (before re- scrutiny)]
Minimum "Z" Scores for selection to various Courses of Study of Universities, in respect of each district

| DISTRICT \ COURSE OF STUDY | MEDICINE (University of Colombo) | MEDICINE (University of Peradeniya) | MEDICINE (University of Sri Jayewardenepura) | MEDICINE (University of Kelaniya) | MEDICINE (University of Jaffna) | MEDICINE (University of Ruhuna) | MEDICINE (University of Moratuwa) | MEDICINE (Eastern University, Sri Lanka) | MEDICINE (Rajarata University of Sri Lanka) | MEDICINE (Sabaragamuwa University of Sri Lanka) | MEDICINE (Wayamba University of Sri Lanka) | DENTAL SURGERY (University of Peradeniya) | DENTAL SURGERY (University of Sri Jayewardenepura) | VETERINARY SCIENCE (University of Peradeniya) | BIOCHEMISTRY & MOLECULAR BIOLOGY (University of Colombo) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| COLOMBO | 2.3291 | 2.1807 | 2.1282 | 2.0511 | 1.9284 | 1.9632 | 1.9220 | 1.9192 | 1.9330 | 1.9256 | 1.9313 | 1.8534 | 1.8590 | 1.7397 | 1.7978 |
| GAMPAHA | 2.3707 | 2.1855 | 2.1374 | 2.0542 | 1.7173 | 1.9682 | 1.9214 | NQC | 1.8387 | 1.6995 | 1.7018 | 1.6740 | 1.6856 | 1.6297 | 1.6299 |
| KALUTARA | 2.3290 | 2.2109 | 2.1294 | 2.0739 | 1.7933 | 1.9664 | 1.9138 | NQC | 1.8743 | 1.7943 | 1.7883 | 1.7794 | NQC | 1.7389 | 1.7536 |
| MATALE | NQC | 2.2968 | NQC | 2.0739 | 1.7872 | 1.9687 | NQC | NQC | 1.8363 | NQC | 1.7716 | 1.7449 | NQC | 1.7091 | 1.7408 |
| KANDY | 2.3559 | 2.1825 | 2.1436 | 2.0513 | 1.8311 | 1.9900 | 1.9032 | NQC | 1.8596 | 1.8493 | 1.8217 | 1.8114 | NQC | 1.7606 | 1.8032 |
| NUWARA ELIYA | 2.3427 | 2.2089 | NQC | NQC | 1.7018 | 1.9859 | NQC | 1.4755 | 1.8460 | NQC | 1.6030 | NQC | 1.4637 | 1.4199 | 1.4124 |
| GALLE | 2.3357 | 2.1812 | 2.1291 | 2.0745 | 2.0383 | 1.9683 | 1.8991 | NQC | 1.9164 | 1.8923 | 1.8930 | 1.8577 | 1.8520 | 1.7700 | 1.8109 |
| MATARA | 2.3413 | 2.1867 | 2.1302 | 2.0513 | NQC | 1.9661 | 1.9236 | NQC | 1.9440 | 1.9279 | 1.9625 | 1.8652 | 1.8631 | 1.7838 | 1.8085 |
| HAMBANTOTA | 2.3664 | 2.1972 | 2.1466 | 2.0552 | 1.8669 | 1.9932 | 1.9090 | 1.8476 | 1.8934 | 1.8530 | NQC | 1.8249 | NQC | 1.7700 | 1.7882 |
| JAFFNA | 2.3523 | 2.1868 | 2.1331 | NQC | 1.8700 | NQC | 1.9043 | NQC | NQC | NQC | NQC | 1.8516 | NQC | 1.7417 | 1.8149 |
| KILINOCHCHI | 2.3312 | NQC | 2.1628 | NQC | 1.7085 | NQC | NQC | 1.4665 | NQC | NQC | NQC | NQC | 1.4595 | 1.4482 | 1.2509 |
| MANNAR | NQC | NQC | NQC | NQC | 1.7153 | 2.0080 | NQC | NQC | NQC | NQC | NQC | 1.6981 | NQC | 1.6781 | 1.6198 |
| MULLAITIVU | 2.6035 | NQC | NQC | NQC | 1.7161 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.7104 | 1.7033 | 1.4887 |
| VAVUNIYA | 2.3430 | 2.2299 | 2.1625 | 2.0804 | 1.7178 | NQC | 2.0106 | NQC | NQC | NQC | NQC | 1.7105 | NQC | 1.7061 | 1.6437 |
| TRINCOMALEE | 2.3366 | NQC | 2.1399 | 2.0635 | 1.7032 | 1.9769 | 1.9682 | 1.9139 | 1.8458 | NQC | 1.6985 | 1.6941 | NQC | 1.6596 | 1.6851 |
| BATTICALOA | 2.3427 | 2.1827 | 2.1449 | 2.0524 | 1.8369 | 2.0273 | 1.9193 | 1.8755 | 1.8609 | NQC | NQC | 1.8133 | NQC | 1.6827 | 1.7347 |
| AMPARA | 2.3439 | 2.2954 | 2.1300 | 2.0562 | 1.7939 | 1.9645 | 2.0042 | 1.8026 | 1.8444 | 1.8129 | 1.8203 | 1.7805 | 1.7829 | 1.7193 | 1.6605 |
| PUTTALAM | 2.3609 | 2.1997 | 2.1282 | 2.0544 | 1.7014 | 1.9934 | 1.9593 | NQC | 1.8379 | 1.7307 | 1.6878 | 1.6673 | NQC | 1.5761 | 1.6327 |
| KURUNEGALA | 2.3717 | 2.1811 | 2.1311 | 2.0518 | 1.8317 | 1.9628 | 1.9167 | NQC | 1.8368 | 1.9561 | 1.8327 | 1.8081 | NQC | 1.7810 | 1.8007 |
| ANURADHAPURA | 2.3478 | 2.1850 | 2.1362 | 2.1113 | 1.7029 | 1.9675 | 1.9516 | 1.4950 | 1.8668 | 1.8704 | 1.5990 | 1.5067 | 1.4877 | 1.4641 | 1.4658 |
| POLONNARUWA | 2.4901 | 2.2280 | 2.1644 | 2.0980 | 1.7790 | 1.9648 | NQC | 1.5706 | 1.8391 | 1.7713 | 1.5923 | 1.5502 | NQC | 1.4370 | 1.5321 |
| BADULLA | 2.3860 | 2.1834 | 2.1701 | 2.0548 | 1.7012 | 1.9627 | 1.9425 | 1.6782 | 1.8362 | 1.6983 | 1.6794 | 1.6466 | NQC | 1.6042 | 1.6005 |
| MONARAGALA | NQC | 2.1977 | NQC | 2.0601 | 1.7648 | 1.9966 | NQC | 1.4059 | 1.8720 | 1.7540 | 1.5885 | 1.4966 | 1.4042 | 1.3783 | 1.3628 |
| KEGALLE | 2.3958 | 2.1815 | 2.1421 | 2.0546 | 1.7941 | 1.9692 | 1.9024 | NQC | 1.8414 | 1.8019 | 1.7787 | 1.7638 | NQC | 1.7447 | 1.7460 |
| RATNAPURA | 2.3374 | 2.1809 | 2.1463 | 2.0527 | 1.7713 | 1.9663 | 1.9451 | NQC | 1.8622 | 1.7850 | NQC | 1.7587 | NQC | 1.7264 | 1.7379 |

